ISSN 1800-3109

# நங்கை


இதழ் 39 - 44/2017



Nangai Women's journal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகளிர் அபிவிருத்தி நிலையம்
யாழ்ப்பாணம்.

**Certre for Women and Development**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : நங்கை - இதழ் - **44/2017**

ஆசிரியர் : சரோஜா சிவச்சந்திரன் M.A

ஆசிரியர் குழு : எம்.தேவகௌரி, ஊடகவியலாளர், கொழும்பு.

: கே.எஸ். சிவகுமாரன், எழுத்தாளர் / விமர்சகர்.

வெளியீடு : மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல. 07, இரத்தினம் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

விலை :

| உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | : ரூபா 50.00 | தனிப்பிரதி | : ரூபா 60.00 |
| ஆண்டுச் சந்தா | : ரூபா 600.00 | ஆண்டுச் சந்தா | : ரூபா 720.00 |
| (தபாற்செலவு உட்பட) | | (தபாற்செலவு உட்பட) | |

Title : Nangai - Issue - **44/2017**

Editor : Saroja Sivachandran, B.A Hons Cey, M.A.Jaf.

Editorial Board: Ms.M.Devagowry, Journalist, Colombo.

: Mr.K.S. Sivakumaran, Writer / Critic

Publishers : Centre for Woman and Development,
No.07, Ratnam Lane, Off.K.K.S. Road,
Jaffna, SriLanka.
Phone : 021 222 4398

Printed by : Theepam Printers,
717, K.K.S. Road, Jaffna.

ISSN : 1800 - 3109

ISSN : 977-180-03100-0-2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | iv |
| 2. | மலர்ந்திடும் நங்கையே ! | v |
| 3. | பெண்கள் தொழில் பார்க்கும் இடங்கள் பெண்களைப் பாதுகாக்குமா? | 01 |
| 4. | முதிர் கன்னி | 05 |
| 5. | யாழ் மாவட்டத்திற்கான பெண்கள் அபிவிருத்திக்கொள்கை | 06 |
| 6. | பொருளாதாரம் | 13 |
| 7. | நிலைமாறுகால நீதி | 15 |
| 8. | பெண்ணியம் ஓர் பார்வை | 18 |
| 9. | சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பெண்களை வலுவூட்டலும் | 20 |
| 10. | கிறுக்கலின் சிதறல்கள் | 23 |
| 11. | மகளிர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் - 2017 | 27 |
| 12. | மகளிர் அரசியல் | 42 |
| 13. | எனக்கு சக்தியில்லை உன்னை மீற | 45 |
| 14. | வதந்தி | 48 |
| 15. | மனிர்களின் ஆயுளைக் குறைக்கும் உணவுப் பழக்கவழக்கங்களும் மருந்துப் பாவனைகளும் | 49 |
| 16. | பெண்ணின் பெருமையும் பெருமூச்சும் | 52 |
| 17. | ஓடிப் போனவள் | 55 |
| 18. | நன்றிகள் | 63 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை :-

இலங்கையின் அரசியலில், பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் பெண்கள் அமைப்புக்களின் ஓயாத செயற்பாட்டின் விளைவாக, உள்ளூராட்சி அதிகார சபைகளில் பெண்களுக்கு 25 வீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளமை, அரசியலில் பெண்கள் ஈடுபடுவதற்கான முதற்படிகல்லாகும்.

இலங்கையின் சனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாக காணப்பட்ட போதிலும் மிகச் சிறுதொகையினரே அரசியல் ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுகின்றனர். 225 அங்கத்தவர் கொண்ட நாடாளுமன்றில், 13 பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளனர்.

தெற்காசியாவில் மிகக் குறைவான பெண்கள் அரசியலில் ஈடுபடும் நாடு இலங்கை மட்டுமே. இந்நிலை நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல் முடிவடையும் நிலையில், பெரியளவிலான மாற்றத்தை ஏற்படுத்துமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

போரினால் உருக்குலைந்த ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் 80 வீதமான பெண்கள் பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர். அதே போல போரினால் பாதிப்படைந்த குடும்ப ஆண் அங்கத்தவர்களை இழந்த பெண்கள் 89 ஆயிரம் பேர் வசிக்கும் எமது நாட்டில், அரசியலில் பெண்கள் ஈடுபட முன்வராமைக்கு பல காரணங்கள் கூறப்பட்ட போதிலும், தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை கட்சி ஈடுபாடுகளுடன் இணைத்து செயற்படுத்த வேண்டிய காலம் பெண்களுக்கு இன்று வாய்ப்பாகவே உள்ளது.

இதுவரை ஆண்கள் மேலாதிக்கம் செலுத்தி வந்த கட்சிகளுக்கு, பெண்களின் திடீர் பிரவேசம், தயக்கத்தை ஏற்படுத்திய போதிலும், தயங்காது தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்களே !

என்ன சாமர்த்தியம் !

என்ன சாணக்கியம் !

**ஆசிரியர்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்திடும் நங்கையே !

புது ஆக்கம் கொண்டு
பூம்புனல் பூத்திட
சிறந்த முன்மொழிவுகளை
நேர்பட உரைத்திடும்
உந்தன் வருகையில்
எத்தனையோ பெண்ணினம்
மலர்ந்திட வைத்தாய்!

பெண் என்ற அடிச்சுவடாய்
பெருமைகள் சேர்த்திட
புன்னகை பூத்து நீ
பூமிக்கொரு தத்துவம்
உரைத்திட நீயும்!

வாடிடாத மலர் போல
வாழ்வில் தத்தளிக்கும்
பெண்ணினத்தை
உள்ளம் குளிரவைத்து
வாழ்வின் அர்த்தத்தை
எடுத்துரைப்பாய் நீ !

வாழ்க்கை என்பது புதிர்
அதை காய்நகர்த்த
தெரிந்தவளே பெண் என்பதை
உன்னால் புரியட்டும் இந்த
மானிட மூடர்கள்!

உன் வருகை என்றுமே
தொடரட்டும் நங்கையே!!!

பாலராணி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தொழில் பார்க்கும் இடங்கள் பெண்களைப் பாதுகாக்குமா?

நவீனத்துவத்தின் உருவாக்கம் கௌரவம், தனித்துவம் என்ற தேவைகளை முன்னிறுத்தி புதுமை, பழமை என்ற சிந்தனைகட்குள் அதிகாரமற்ற மனித வர்க்கத்தினரிடையே பலவிதமான அதாவது வகுப்பு, சமூதாயம், தேசியம், பால்நிலை தொடர்புகள் என பல்லேறு கட்டமைப்புக்களை திணித்துள்ளது தவிர நவீனத்துவமானது பல நவீன வகையான சுரண்டல், அடிமைத்தனம் போன்ற வன்முறை வகைகளையும் தோற்றுவித்துள்ளது.

பெண்கள் கடத்தப்படல் அதற்காக உருவாக்கப்பட்டுள்ள நவீன வலையமைப்பு, விஞ்ஞான வைத்திய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பெண் சிசுக்களை கருவிலே அழித்தல், குடித்தொகை கட்டுப்பாடு என்ற போர்வையில் நிகழ்த்தப்படும் இன அழிப்பு, மத தீவிர வாதிகளால் ஏற்படுத்தப்படும் பெண்கள் மீதான வன்முறைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். உலகமயமாதலின் முன் அரசியல் முறைமைகள் பலமிழந்துள்ளன.

எதிர்பாரா வகையில் இடம்பெற்று வரும் இடம்பெயர்வுகள் மக்களின் வாழ்வியல் நிலைமைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதன் காரணமாக சமூக அமைப்புக்கள் தம்மை மீள் உருவாக்கம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சமூக மட்டத்தில் பெண்கள் எதிர் நோக்கும் வன்முறைகள் தொடர்பாக புதிய பார்வையொன்று எமக்கு தேவைப்படுகின்றது.

பெண்கள் ஓர் வருமானம் கிடைக்கும் தொழிலைப் பெற்றுக்கொண்டால் அதுவே அவர்கட்கு பாதுகாப்பாக கருதப்பட்ட நிலைமாறி இன்று வேலைத்தளங்கள் கூட அவர்கட்கு பாலியல் தொல்லை கொடுக்கும் தளங்களாக மாறியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாலியல் வன்முறைகள் உலகெங்கும் நிகழ்கின்றதுடன் எந்தவொரு நாடும் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருந்தாலும் அவ்வன்முறை கட்கு தடுப்பாற்றல் கொண்டவையாக இல்லை. பாலியல் சம்பவங்கள் பாரம்பரிய ஆணாதிக்க சமூதாயங்களுடனான நாடுகளில் அதிகளவில் முறையிடப்படாது விடப்படுகின்ற அசமந்த போக்கே காணப்படுகின்றது.

பாலியல் வன்முறை உடல் ரீதியாக மற்றும் உள ரீதியான நலன்களிலும் ஓர் ஆழ்ந்த தாக்கத்தை கொண்டுள்ளதாயினும், பாலியல் தொல்லைகள் மூடிய கதவுக்குள், இடம்பெறும் ஓர் சமூக சீரழிவாக இருந்த போதிலும் இன்றும் நாம் இது தொடர்பாக போதியளவு கலந்துரையாடுவதில் கவனம் செலுத்துவதில்லை.

பால்நிலை வேறுபாடுகளுக்கப்பால் பாலியல் தொல்லைகள் ஓர் பொதுவான பிரச்சனையாகவே காணப்படுகின்றது. இலங்கையில் வேலைத்தளங்களில் அது முறையான, முறைசாரா தொழில்களாக இருப்பினும் சரி கல்வி நிறுவனங்கள், பொது போக்குவரத்து போன்ற நடைமுறைகளில் பெண்கள் பாலியல் தொல்லைகட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ள நேரிடுவதனால் அச் செயற்பாடுகள் தொழில் ரீதியான கவனமின்மை, உடல், உளரீதியான பாதிப்புடன் சமூக நலனையும் பாதிப்பதாகவுள்ளது.

21ம் நூற்றாண்டில் பெண்கள் உயர் பதவிகளில் மட்டுமின்றி தொழில் வாய்ப்பில் தனியார்/பொதுத்துறைகளில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளனர். ஆண் பெண் பாரபட்சமில்லாக் கல்விக்கொள்கை பெண்களை ஆண்களோடு சமமான திறன்களை வளர்த்துள்ளது. இவ்வகையில் பெண்கள் செயற்பாட்டாளர்களின் பங்கை குறைவாக எடைபோட முடியாது. பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் கணிசமான பங்களிப்பு வளர்க்கப்படுவதோடு இன்று அதாவது போரின் பின்னைய காலப்பகுதியில் ஆண்களை மையமாகக் கொண்டிருந்த குடும்பத் தலைமையும் பொருளாதார குவிப் பும் இன்று பெண்கள் தலைமைக்கு மாறியுள்ளது.

ஆகவே தொழில் வாய்ப்பில் பெண்களை வலுப்படுத்த வேண்டிய தேவை கட்டாயமாக உள்ளதோடு அவ்வாய்ப்புக்கள் பாதுகாப்பானதாகவும் தொழில் நலன் விருத்தியைக் கொண்டதாகவும் அமைதல் இன்றியமையாததாகும்.

இலங்கையின் தொழில் சக்தியில் 1977 இன் பின் பெண்களின் பங்களிப்பு அதிகரித்திருந்த போதிலும் ஆண்களைவிட இதன் விகிதாசாரம் குறைவாகவே உள்ளது. இதற்கு பல காரணங்கள் இருந்த போதிலும் பாலியல் தொல்லை பிரதான காரணியாக காணப்பட்டுள்ளது. அதிகமான பெண்கள் தொழில் பார்க்கும் இடங்களில் அவர்களது பொருளாதார சமூக கல்வி நிலைகட்கு அப்பால் பாலியல் தொல்லைகட்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்நிலை முறைசாரா முறைசார் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் அவர்கள் கல்வி கற்றவர் கற்காதவர் ஆக இருப்பினும் மேலும் உயர்மட்ட அதிகாரி களாக இருப்பினும் கூட இடம்பெறுவது அறியப்பட்டுள்ளது. இதனால் பாதிப்புக் குள்ளாகும் பெண்கள் மனநிலை குழப்பம் அடைவதோடு தமது தொழிலின் உற்பத்தித்திறனை குறைவடையச் செய்வதோடு வருகை தருவதிலும் நாட்டம் காட்டுவதில்லை. (சர்வதேச தொழில் ஸ்தாபனம் 2000)

தொழில் ஸ்தாபனங்களில் பாலியல் தொல்லை என்பது பின்வரும் வடிவங் களில் இருக்கலாம்.

- வேண்டும் என்றே உடம்பைத்தொடுதல்
- பாலியல் தொடர்பான வார்த்தைகளைப் பிரயோகித்தல்
- இரட்டைக்கருத்துப்பட பகிடிவிடுதல்
- பாலியல் தொடர்பான படங்களைக் காண்பித்தல்
- பதவி உயர்வு இடமாற்றம் வேண்டின் பாலியல் லஞ்சம் வேண்டல்
- தொலைபேசி, மின்னஞ்சலுடாக தனிப்பட்ட ரீதீயில் செய்திகளைப்பரப்புதல்

பெண்கள் தொழில் சார்ந்த பணியாற்றும் நிறுவனங்கள் பல்தரப்பட்டவை. எட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியால வேலை ஒழுங்கு மற்றும் வைத்தியசாலைகளில் பெண் வைத்தியர்கள் தாதிமார்கள் மேற்பார்வையாளர்கள் என பலர் இரவு கடமையாற்றுகின்றனர். மேலும் வங்கிகளில் பெண் அலுவலர்கள் மேலதிகமாக வேலை வேண்டி நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

சாதாரணமாக வியாபார வர்த்தக நிறுவனங்கள் சுமாராக எட்டு மணித்தியால வேலை ஒழுங்கை ஒழுங்காக கடைப்பிடிப்பதில்லை. இங்கெல்லாம் பெண்களுக்கு மேற்பார்வையாளர்கள் அல்லது அவர்களது நலனைக் கவனிப்போர் குறைவாகவே உள்ளது. இச்சந்தர்ப்பங்கள் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவதற்கு சாதகமாகவே உள்ளன. இன்று கல்லூரிகள், பாடசாலை மட்டத்திலும் பாலியல் தொல்லைகள் இடம்பெறுவதாக அறிய முடிவதோடு இவை பத்திரிகைகளிலும் பிரதான செய்திகளாக இடம்பெற்றிருந்தன.

பெண்கள் பாலியல் தொல்லைகட்கு உள்ளாவதற்கு அவர்களது ஆடைகள், நளின சுபாவங்கள் ஆண்களை அவ்வாறு நடப்பதற்கு தூண்டுவதாக கூறுவோரும் உளர். ஆயினும் இதனை பெண்ணிய வாதிகள் ஏற்பதாக இல்லை. முக்கியமாக இலங்கையில் பெரும்பாலான நிறுவனங்களில் தமக்கென ஓர் பால் நிலை கொள்கை கடைப்பிடிக்காமை ஓர் குறைபாடாகவே உள்ளது.

தென்னாசிய நாடுகளில் இலங்கையில் மட்டுமே பாலியல் தொல்லைகட்கு சட்டரீதியான நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையின் 345வது பிரிவு குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் ஒருவர் பாலியல் தொல்லை சொல்லினால் அல்லது செயலினால் ஏற்படுத்தப்படும் போது அச்செயலானது சட்டத்தின் முன் நீதிக்குட் படுத்தப்படின் அந்த நபருக்கு குறைந்தது 5 வருட சிறைத்தண்டனையும் தண்டப் பணமும் அறவிடப்படும். பாதிக்கப்பட்ட நபர் தொழில் பார்க்கும் இடத்தில் தனக்கு ஏற் பட்ட பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக ஓர் முறைப்பாட்டை பொலிஸ் நிலையத் தில் பதிவு செய்வதன் மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சர்வதேச தொழில் ஸ்தாபனமும் இலங்கை வர்த்தகசங்கம் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் இனைவாக இலங்கை கம்பனிகட்கு ஓர் ஒழுக்காற்று முறையை பாலியல் தொல்லைகளில் இருந்து தடுப்பதற்காக ஏற்படுத்திக் கொள்ளு மாறு கேட்டுள்ளன. இவ்வாறான ஒழுக்காற்று முறையானது மூன்று மொழிகளிலும் பார்வைக்கு இடல் வேண்டும். இவ்விதிகட்கமைய பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெறும் சந்தர்ப்பத்தில் பாதிப்புக்குள்ளானவரின் வைத்திய செலவுகளை முதலாளிமார் ஏற்க வேண்டும்.

இவை தவிர ஜக்கிய நாடுகள் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல சமவாயங்களில் குறிப்பாக பெண்களுக் எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான சமவாயத்தை (1979) இலங்கை அங்கீகரித்துள்ளது. சீடோ (CEDAW) சமவாயத்திற்கேற்ப தொழில் நிலையங்களில் ஏற்படும் பாலியல் தொல்லை கள் தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சம் காட்டாமை பதவியுயர்வு தொழில் பாதுகாப்பு என்பவற்றிற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

இவை தவிர பாதிக்கப்பட்ட ஓர் பெண் தொழிலாளி மனித உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இலங்கையில் காணப்படும் இரு சமவாயங்களிலும் ஆக்கங்களும் தொழில் நிலையங்களில் ஏற்படும். பாலியல் தொல்லைகளை தடுப்பதற்கு போதுமானதாக இருந்த போதிலும் இவற்றை செயற்படுத்துவதில் பல கால தாமதங்கள் ஏற்படுகின்றன. முதலாவதாக பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் தனக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக முறையிடுவதில்லை. இதற்கு பல காரணங்கள் உள.

- சட்ட ரீதியாக ஏற்படும் கால தாமதம்
- தொழில்தருநரிடம் காணப்படும் பயம்
- தனது பெயர் மதிப்பு பாதிக்கப்படல்
- சட்ட ரீதியாக போதிய அறிவின்மை
- தொழில் நிலையத்தில் பாலியல் தொல்லைகளைத் தடுப்பதற்கான கொள்கை இன்மை

✓ இவை போன்ற காரணிகளால் பாதிக்கப்படும் பெண்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதில்லை.

✓ பெண்களை தொழிலுக்கு அமர்த்தும் நிறுவனங்களில் பாலியல் தொடர்பான துஷ்பிரயோகங்களுக்கு தொழில் தருனரே பொறுப்புக் கூற வேண்டும்.

✓ தொழில் பார்க்கும் இடம் பெண்களுக்கு பாதுகாப்பானதாகவும், அதனைப் பெண்கள் உணரக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். (மூடிய அறைகள்)

✓ இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் சமவாயங்கள் சட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்தல்

✓ தொழிற் சங்க கட்டளைச் சட்டம், தொழிலாளர் நஷ்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம், ஆகியவையும் மீளாய்வு செய்யப்படுதல் அவசியம்.

போர்க்கால சூழ் நிலை அச்சங்களில் இருந்து இன்னும் விடுபடாத பாதிக்கப் பட்ட மக்கள் தற்போதைய சமாதான சூழ்நிலை என்று அழைக்கப்படும் நிலமை களிலும் தமக்குரிய நீதியை உள்ளக நீதிமன்றங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் உரிமை இருந்த போதிலும் அவர்கட்கு துணிச்சலோ, வழிவகைகளோ, பணமோ இல்லாத சூழ்நிலை காணப்படுவது பரிதாபத்திற்குரிய விடயமாகவே உள்ளது.

**சரோஜா சிவச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் தானாக முன்னேறியவர்
## யாரும் இல்லை.......!
## நீ உழைக்க தயாராக இருந்தால்.............!
## சிலர் உனக்கு உதவ தயாராக இருப்பார்கள்....!

# முதிர் கன்னி

முன்னோர் செய்த பாவங்களோ!
கரை சேர வழியின்றி குறையுடன் இன்று
குற்றம் பொறுக்காத சாபத்தில்
எத்தனை ஆடவர் மரணங்கள்!

திருமணம் என்ற இணைபந்தம்
சீதனம் என்ற கொடுமையின் அகங்காரம்
இத்தனைக்கும் மேல் எத்தனையோ
பெண்கள்!

முதிர் கன்னி என்பதன் அதிகரிப்பு
உலக அழிவின் தொடர்ச்சியே!

பெண்களே!
நீங்கள் போடும் சாபங்களே!
உங்கள் இனத்தின் தலைவிதிகள்

அதை மாற்றுவது என்பது எளிதல்ல!
நீங்கள் மாறுவது என்பதும் சுலபமல்ல!
சுயநலக் குணத்தினை அழித்திடுங்கள்!
குறைகூறும் எண்ணங்களை மறந்திடுங்கள்!


எனிவரும் காலங்கள்
முதிர் கன்னியின் பெருக்கமே!!!
ஏன் எனில் உங்கள் பாவங்களின் தொடர்ச்சியே!

சுஜி – யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்திற்கான பெண்கள் அபிவிருத்திக் கொள்கை

**நோக்கம்**



நாம் அனைவரின் உரிமைகளையும் மதித்து அதன் கொள்கைகள் மற்றும் அதன் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த எமது செயற்பாடுகள் மூலம் சமூகத்தில் உரிமைகளைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம். ஒரு அமைப்பு என்ற முறையில் எந்தவொரு நபரும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் நம்பிக்கை, பிறப்பிடம் அல்லது அதே போன்ற எந்தவொரு அடிப்படையிலும் எந்த ஒரு பிரசையும் பாரபட்சப்படுத்தப்படக் கூடாது எனும் சமத்துவக் கொள்கை மற்றும் சூழ்நிலைகளை உருவாக்குவதடாகயாழ் மாவட்டத்தில் பால்நிலை சார் பிரச்சினைகளை அடையாளம் கண்டு ஆராய்ந்து பெண்கள் அபிவிருத்திக்காக தீர்வுகளை அடைவதற்கான திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

## 1. பின்னணி

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் அதிகரிப்பு யுத்தங்களின் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளினால் கலாசார கலப்புக்கள், கலப்புத்திருமணங்கள்,பலதாரதிருமணங்கள், வெளியாட்களின் வருகை மற்றும் மது போதைவஸ்து பாவனையின் பெருக்கம், உல்லாசத் துறையின் வளர்ச்சி அரசியல் காரணிகள், சமத்துவமில்லாக் கொள்கைகள் தன்மை கள் காரணமாகவும் தொலைக்காட்சி சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்களின் பாவனை அதிகரிப்பு மேலும் வெளிநாட்டு நாட்டம் மற்றும் செல்வாக்குகளால்பரந்து வளர்ந்து காணப்படும் பால்நிலை சார் வன்முறைகளின் அதிகரிப்பும் அத்தோடு சமூக, பொருளாதார கலாசார ஆன்மீக மற்றும் பண்பாட்டு முறைகளின் மாற்றங்கள் போன்ற கூறுகளால் அபிவிருத்தித் திட்டங்களில் பொதுமைத் தன்மையற்ற நிலை காணப் படுகின்றது.

இவற்றின் நிமித்தம் சில மாற்றங்கள் கட்டாய தேவையாகவுள்ளது. அதாவது கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் அபிவிருத்திப் பணிகளில் திட்டங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதும் தேவையாக காணப்படுகின்றது. எனவே பால்நிலை சார் கொள்கைகள் பெண்களின் தனித்திறமை மற்றும் அபிவிருத்திப் பணிகளில் முக்கிய பங்காளியாகும். இதனடிப்படையில் இங்கு கொள்கையானது தயாரிக்கப்பட்டது.

## 2. அர்ப்பணிப்பும் பொறுப்பும்

அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தலும் ஊக்குவித்தலும் எனும் நோக்கத்தையும் பின்னணியையும் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பால்நிலை சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைத்திட்டத்திற்கான அமுல்படுத்தலும், கண்காணித்தலும், மீளாய்வு செய்தலும், தொடர் செயற்பாடுகளை மேற்கொள்வதும் CNGO கான அர்ப்பணிப்பும் பொறுப்புமாகும்.

## 3. பால்நிலைக் கொள்கைத் தேவைக்கான நிறுவனச் சூழ்நிலை அல்லது சூழல்

எமது செயற்பாடுகள் மற்றும் திட்டங்களில் ஆண் மற்றும் பெண்களின் பங்களிப்புக்களை உள்வாங்குதல் தொடர்பில் அதிக கவனம் எடுத்தல் இன்றிய மையாததாகும். பால்நிலைசார் பிரச்சினைகளை புரிந்து கொண்டு அதற்கான காத்திரமான அர்த்தமுள்ள அணுகுமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தல். மேலும் குழுவாக அல்லது அமைப்பாக இயங்கும் போது தமது உரிமைகளை ஆய்ந்தறிந்து செயற்படல். அதாவது பாதுகாப்பற்ற நிலையானது சமூகம் மற்றும் பெறக்கூடிய அல்லது கிடைக்கின்ற வாய்ப்புக்கள் மற்றும் வளங்களை தடுக் கின்றதுடன் அவைகள் பொருளாதாரம்இ அரசியல் மற்றும் சமூகத்தில் காணப் படும் சமூகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளால் பெண்களின் ஈடுபாட் டுடனான செயற்பாடுகளை மறைக்கின்றன. எனவே தான் நிறுவனக்கட்டமைப்பு என்ற வகையில் பெண்கள் உரிமைகளை மதித்து காத்து அபிவிருத்தியில் அவர் களை மேம்படுத்துதல் அவசியமாகும்.

## 4. பால்நிலை சமத்துவதிற்கான நிறுவன விழுமியங்கள்

- பெண்கள் உரிமைகள் மனித உரிமைகள்
- தீர்மானம் மேற்கொள்ளலில் ஆண் மற்றும் பெண்களின் சமமான பிரதிநிதித்துவம்.
- ஆண் மற்றும் பெண்களுக்கான தனித்துவமான தேவைகளை அடையாளப் படுத்துதல் மேலும் அதனை அடைவதற்கான சமத்துவ கொள்கையுடன் பயணித்தல்.
- பால்நிலை சமத்துவத்தை கருவியாகப் பயன்படுத்தி பால்நிலைசார் அச்சு றுத்தல் மற்றும் பாகுபாட்டை அடையாளம் காணல். ஆத்துடன் அவற்றைக் குறைப்பதற்கான அணுகுமுறைகளை வகுத்தல் மற்றும் நடைமுறைப் படுத்தல். அத்துடன்
- செயல் சமத்துவத்தைக் கொண்டு பெண்களின் மேம்பாட்டை உயர்த்துதல்.

## 5. வரைவிலக்கணம்

- *பால் (Sex):*

  பால் என்பது உயிரியல் இயல்புகளைக் குறிக்கின்றது. இது ஆணுக்குரிய இயல்புகளாகவோ, பெண்ணுக்குரிய இயல்புகளாகவோ காணப்படும். இயற் கையானதும் மற்றும் உடலமைப்பு, உடற் தொழிற்பாடு, ஓமோன்களால் தீர் மானிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ***பால்நிலை (*Gender*):***

இயற்கையாகப் பால் அடிப்படையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ள பெண்களுக்கும், ஆண்களுக்குமிடையில் சமூகத்தால் வழங்கப்படும் அல்லது வரையறுக்கப்பட்ட காலத்திற்கு காலம் மாற்றமடையக்கூடியது.

- ***பால்நிலைசார் வன்முறைகள் (*Gender Based Violence*):***

பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமமற்ற அதிகார உறவுகளால் தோற்றுவிக்கப்படுவது. இது ஆண்களுடனும் பெண்களுடனும் சம்பந்தப்பட்டது எனினும் பொதுவாகப் பெண்களே வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

- ***பால்நிலை சமத்துவம் (*Equality*):***

சமமான தன்மை, பங்கேற்பு, வளப்பகிர்வு, மற்றும் முகாமைத்துவம், தீர்மானம் மேற்கொள்ளல், சலுகைகளைப் பெறல் ஆகிய விடயங்களில் பெண் ஆண் ஆகிய இரு பிரிவினரையும் சமனாகக் கவனித்தல்.

- ***பால்நிலை ஒப்புரவு (*Equity*):***

பெண்களதும் ஆண்களதும் தேவையின் அடிப்படையில் அவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் வழங்குதல். பால்நிலை மூலம் நிர்ணயிக்கப்பட்ட சமூக மாறுபாடுகளின்படி அவர்களுக்கு அநியாயம் ஏற்படாமலிருப்பதற்கு வழி செய்தல்.

- ***ஆண்மை (*Masculinity*):***

ஆண்களின் வகிபாத்திரங்கள் உள்ளடங்கலான ஆண்களின் நடத்தைகள் மற்றும் பண்புகளின் தொகுப்பு.

- ***பெண்ணியம் (*Feminism*):***

பெண்களின் உரிமைக்காக அரசியல் சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பெண்களும் ஆண்களுக்குச் சமமானவர்களென ஆதரித்து வாதாடுதல்.

- ***பால்நிலை சமூகக் கோட்பாடுகள் / எண்ணக்கரு (*Socil Concept*):***

சமூக பின்னணி சமூக கட்டமைப்பு சமூக கொள்கை மற்றும் பண்பாடுகளின் அடிப்படையிலான பால்நிலை பற்றிய சமூக அங்கங்களின் சிந்தனைகளும் மரபுகளின் வெளிப்பாடுகளும்.

- ***பால்நிலை முக்கியத்துவம் (*Gender mainstreaming*):***

ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பிரிவினருக்கும் ஒரே சமனான முறையில் பலன் கிடைக்கும் வண்ணம் செயற்திட்டங்கள், நீதி கொள்கை வகுப்புக்கள் மற்றும் சமமான வளப் பகிர்வு உட்பட் மற்றும் திட்டங்கள் வகுத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுதலும் மேற்பார்வை செய்தலும். இவ் சகல விடயங்களையும் அபிவிருத்தி, அரசியல், மற்றும் சமூக மட்டங்களிலும் செயற்படுத்தல்.

- ***பால்நிலைத் தொழில் பிரிவுகள்:***

தற்காலத்தில் உலகில் குறிப்பாகஇலங்கையில் அதிகமான துறைகளில் பெண் ஆண் இருபாலாரும் தோளோடு தோள் சேர்ந்து செயற்படுகின்றனரென்பது குறிப்பிடத்தக்கது. மேல்மட்ட முகாமைத்துவம், பொறியியல், தொழிநுட்பம் போன்ற துறைகளில் பெண்களுக்குள்ள சந்தர்ப்பமும் ஈடுபாடும் அதிகரித்து முள்ளது.

சமூகத்தினால் ஆண்பெண் இருபாலாரும் அந்தந்த தொழிற் துறைகளுக் கெனப் பிரிக்கப்பட்டுள்ள நிலைமைகள் மற்றும் தொழிற் துறைகளுக்குரிய முறையில் ஆண் பெண்இருபாலாருக்குமான ஊதியப் பரம்பல்.

## 6. கொள்கைகள் (POLICIES)

- அரசசார்பற்ற நிறுவனமானது ஆண், பெண் சமத்துவமற்ற அபிவிருத்தி செயற்பாடுகளை அடையாளம் காண்பதும் அதனைப் பொருத்தமான இடங்களில் தெரியப்படுத்துவதும்

- உரிமை அடிப்படையிலான திட்ட வேலைகளை வரைதலும் குறிப்பாக (CEDAW எமது சட்டம் சார் விடயங்களை உள்நாட்டு சட்டங்கள்) பால்நிலை சமத்துவமற்ற நிலையை ஆராய்தலும் பால்நிலை சமத்துவமற்ற நிலையில் ஏற்படும் விளை வுகளை வெளிப்படுத்தலும்

- இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் நம்பிக்கை, பிறப்பிடம் அல்லது அதே போன்ற எந்தவொரு அடிப்படையிலும் எந்த ஒரு பிரசையும் பாரபட் சப்படுத்தப்படக் கூடாதுஇலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பு -1978

- பெண்களின் அடிப்படையான சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பாதிக்கக் கூடிய வகையில் பால் அடிப்படையில் பாகுபடுத்தல், புறக்கணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற அனைத்தும் பெண்களுக்கெதிரான பாரபட்சம் CEDAWசமவாயம்

- ஐக்கிய நாடுகள் சபை தனது 1325 ஆவது கூட்டத் தொடரில் குறித்துரைத்துள்ள பெண்ணுரிமைகள்

- உடல், உள பாலியல் ரீதியான பாதிப்பை அல்லது வேதனையை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக் கூடிய எந்த வகையான பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்று அர்த்தப்படும். இவை தனிப்பட்ட வாழ்விலோ அல்லது பொது வாழ்விலோ நிகழ்வதாக இருக்கலாம். DEVAW பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லா தொழிக்கும் பிரகடனம் ( வியன்னா பிரகடனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட வாழ்விலோ பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு எந்தவிதமான செயல்கள் அல்லது செயற்பாடுகள் காரணமாக உடல்,உள, மற்றும் பாலியல் இம்சைக்கு, வேதனைக்கு, காயம் அல்லது தாக்குதலுக்கு பெண்கள் ஆளாதல் மற்றும் ஆளாக்குதல், பயமுறுத்துதல், பலாத்காரமாகவோ அல்லது வேண்டுமென்றோ பெண்ணின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்தல். - United Nations Declaration- 1993)

- இலங்கை பெண்கள் பட்டயம் பெண்கள் சம்பந்தமான தேசியக் கொள்கை (Women's Charter) 1993

- பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் வகையில் பெண்களின் உரிமையைக் காத்தல் National Women's Bureau

- பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் அபாயகரமான அதிகரிப்பானது சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்களது நிலை, அவர்களது இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பொது வாழ்வில் அவர்களது பங்களிப்பு போன்றவற்றுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. மக்கள் தொகை இனப் பெருக்கம் பற்றிய சுகாதாரத் துறை கொள்கை 1998 - Family Health Bureau

- சுகாதாரத் துறையானது, தமது 2007-2016 இற்கான பெருந்திட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் பல்வேறு வடிவங்களை பாரிய சுகாதாரப் பிரச்சினையாக அங்கீகரித்திருப்பதுடன், இதைக் கையாள்வதற்கான தமது இயலுமையை அதிகரித்தல்

- குடும்ப வன்முறைச் சட்டம் ( 34 ஆம் இலக்க 2005) 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைச் சட்டம்

- 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்பு கட்டளைச் சட்டம்

- ஆண் மற்றும் பெண் பங்களிப்புடனான பங்காளர்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தும் மற்றும் செயற்பாடுகளில் முன்னுரிமைப்படுத்தல், நோக்க உருவாக்கல், மூலோபாயத் திட்டத்தை வரைதல் (Strategic Plan)

- ஆண் பெண் பால்நிலை தொடர்பான இயலளவு விருத்திப் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கு உதவுதல்

- பால்நிலை சார் கொள்கை மாற்றங்கள் மற்றும் நிறுவனம் சார் கொள்கை திரட்டுக்கள் தயாரிப்பதற்கு உதவுதல்
    - பால்நிலைநடத்தை விதிகள் (Code of conduct)
    - மனிதவள கொள்கைகள்
    - நிறுவன ஒருங்கிணைப்பு செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பால்நிலைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வளங்களை அடையாளப்படுத்தலும் பெறலும்
- வலையமைப்பை உருவாக்கலும் தொடர்புகளை மேற்பார்வை செய்தலும் ஆவணப்படுதலும்
- கண்காணிப்பு மற்றும் மீளாய்விற்கான அணுகுமுறைகள் மற்றும் செயல் வடிவங்கள்அல்லது முறைகள் (PROCESS) மற்றும் செயற்பாட்டுச் சட்டத்தை (LFA) உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும்( வினாக்கொத்து)
- ஆவணப்படுத்தல்
- வலையமைப்பை உருவாக்கல், தொடர்புகளை ஏற்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஆவணப்படுத்தல்
- சர்வதேச தினங்களை அனுசரித்தல், பால்நிலை சார் பரிந்துரைகளை மேற் கொள்ளல்
- சமூகம் சார் ஒன்றுகூடல்களை கூட்டுதலும் பால்நிலை சார் ஒருங்கிணைந்த கருத்துக்களை வெளியிடலும்
- கண்காணிப்பு மற்றும் மீளாய்வு (M&E) அறிக்கைகளைத் தயாரித்தலும் ஆவணப்படுத்தலும்

## 7. பிரதான பொறுப்புக்கள்

CNGO இன் கட்டமைப்புக்கள் மற்றும் உருவாக்கப்பட்ட செயற்குழுக்கள் அமைப்பு விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கமைவாக பின்வருவோர் பொறுப்புடையோராவர்

1) நிறைவேற்றுக் குழு (Ex.Co)
2) அங்கத்துவ நிறுவனங்கள் (Member Organizations)
3) அரசசார்பற்ற நிறுவனங்களின் பால்நிலைசெயற்பாட்டுக் குழு (Gender Action Group of the CNGOs)
4) பிரதேச செயலக மட்டத்திலான பால்நிலைசார் வன்முறைகள் பிரிவு (GBV desk)
5) கிராம மட்ட குழுக்கள்

## 9. திட்டங்கள்

- பால்நிலை சார் பயிற்சிகள்
- பால்நிலை சார் விழிப்புணர்வு செயற்பாடுகள்
- பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகள் (TOT)
- பால்நிலை அடிப்படையிலான வலையமைப்பை உருவாக்கல் மற்றும் வலுவூட்டல்
- சர்வதேச பால்நிலை சார் தினங்களை அனுசரித்தலும் பரிந்துரை செய்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 16 நாள் வேலைத்திட்டம்
- சர்வதேச மனித உரிமைகள் தினம்
- மகளீர் தினம்
- இளம் பெண்கள் தினம்
- சர்வதேச சிறுவர் தினம்
- இளைஞர் திறன் விருத்தித் தினம் மற்றும்
- சமூக, கலாசார தினங்களை சிறப்பித்தல்

- கொள்கை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆதரித்து வாதாடுதல் (Advocacy)

- நிறுவனங்களுக்கான பொதுத்தன்மையான பால்நிலை நடத்தை விதித் தொகுப்பு (Gender Code of Conduct)தயாரித்தலும் பங்காளர்களின் பங்கேற்புடன் அமுல்படுத்தலும்

- இலக்கு (Vision of the CNGOs)

- பணிக்கூற்று ( Mission of the CNGOs)

- மூலோபாய நோக்கம் அல்லது நோக்கங்கள்

  பால்நிலை சார் பிரச்சினைகள் மற்றும் போக்குகளுக்கேற்றவாறான பொறி முறைகளைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்ட இலக்குக் குழுக்களை உருவாக்கி செயலாற்றக்கூடிய அழுத்தக் குழுக்களை (Pressure group) ஏற் படுத்தி ஆளுமை மற்றும் இயலளவை விருத்தி செய்தலும் சமூக மட்டத்தில் பிரதேச மட்டதில் மற்றும் மாவட்ட மட்டத்திலும் பணியாற்றுதல்.

- பால்நிலை கொள்கைத் திட்டங்கள்

**10. நிறுவனத்திற்குள்ளான பால்நிலை முக்கியத்துவம்**

1) குறிப்பிட்ட மூன்று வருட காலத்துள் 40% பெண்களை அமைப்பிற்குள் உள்வாங்கல்
2) சமத்துவக் கொள்கைகளின்அமுலாக்கம்

**11. கண்காணிப்பும் மீளாய்வும் மற்றும் ஆவணப்படுத்தலும்**


அமைப்பானது செயற்பாடுகளையும் அதன் தேவைகளையும் மையமாகக் கொண்டு கண்காணிப்பு மற்றும் மீளாய்வுகளை மேற்கோண்டு ஆவணப் படுத்தலையும் மேற்கொள்ளும்.

**சந்திரலிங்கம் சந்திரகுமார்**
**பயிற்சியாளர் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர்**
(C.Chandrakumar Freelance Trainer and Development **Consultant)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம்



உலகின் அண்மைக்கால பொருளாதாரத்தில் ஒவ்வொரு நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. இங்கு பொருளாதாரம் என்பது தொடர்ந்த முன்னேற்றங்களாக கொள்ளப்படுகின்றது. இங்கு முன்னேற்றங்களுக்கு எதிரான பல வீழ்ச்சிகளும் பொருளாதார பிரச்சனைகளாக ஒவ்வொரு நாடுகளும் முகம் கொடுக்க வேண்டிய நிலைகளும் உள்ளது.

ஒவ்வொரு நாடுகளும் பல இன்னல்கள் மத்தியிலும் செயற்படும் செயற்பாடுகளைக் கொண்டு பொருளாதாரத்தின் வளர்ச்சிகளும் பொருளாதாரத்தின் வீழ்ச்சிகளும் கணக்கெடுக்கப்படுகின்றன. அதாவது,

**ஓர் முன்னேற்றத்தில் தொடர்ச்சியாக காந்த சக்தி கொண்ட செயற்பாடுகளால் மட்டுமே பொருளாதாரம் மேன்மேலும் வளர்ச்சியடைகின்றது.**

**உதாரணமாக :- அமெரிக்கா**

**இங்கு பணம் என்ற சொல்லால் பொருளாதாரம் காணப்படுகின்றது.**

நாட்டிற்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதங்கள் மாறுபட்டனவே. ஆனாலும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு ஓர் நாட்டின் பொருளாதார மேம்பாடுகள் கிராம மட்டத்திலான மற்றும் வறுமைக்குட்பட்ட மக்களை சென்றடைவதில்லை. இவ்வாறான பொருளாதார மேம்பாடுகள் மூலமே அனைத்து மக்களும் ஆழ்நிலையில் வறுமையற்று இருப்பது என்பது கடினம்.

பல அரச உதவிகளும் பல நாடுகளின் நன்கொடைகளும் வசதியுள்ள மக்களையே மேலும் வசதிப்படுத்தி வருகின்றன. இதனையே நாட்டின் பொருளாதார வளர்ச்சியாக கணக்கிடப்படுகின்றது. பொருளாதாரம் என்பது சகல நிலைகளிலும் தனியொருவரின் பொருளாதார நிலையினை ஆராயப்படுவதாகும். இது பின்னர் ஒவ்வொரு சமூகம் ஒவ்வொரு நாடு ஒவ்வொரு தேசியம் என பரந்த நோக்கோடு ஆராயப்படுகின்றது.

இலங்கையை பொருத்த வரையில் பொருளாதார வளர்ச்சி வீதம் 2017 ல் 7% ஆகவே காணப்படுகின்றது. இங்கு விவசாயம் மற்றும் கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற மூன்று செயற்பாடுகளையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயதுறையை பொருத்த வரையில் மேம்பாடுகள் வளர்சியடைய பல செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பதற்கு இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும் . கைத்தொழிலை பொருத்த வரை முக்கிய செயற்பாடுகள் கொண்ட நிறுவனங்கள் உயர்த்தப்பட்டு இன்னும் பல இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும். சேவைகளை எடுத்துக் கொண்டால் படித்த இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பற்ற நிலையில் குறைந்த வருமானத்தோடு வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர்.

அதனால் பொருளாதார பின்னடைவுகள் எமது எதிர்கால சந்ததிகளுக்கும் இர்க்கப்படுகின்றது. அதன் விளைவாக "மாற்றமடைந்த பொருளாதாரமே எமது இருகண்கள்" என்ற நோக்கின் படி இன்றைய மற்றும் நாளைய சந்ததிகளின் பொருளாதாரம் என்ன என்பதையே எடுத்துக் கூறப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

நாட்டின் பொருளாதார மேம்பாடுகள் தனிப்பட்ட அரசியல் சார்பாகவோ அல்லது அரசியல் சார்பற்றதாகவோ பகிர்ந்து செல்லப்படுவதால் நாட்டின் பொருளாதார இலக்குகள் சரியாகவும் உண்மையாகவும் காய் நகர்த்தப்படுவதில்லை. இதனாலேயே பொருளாதார சீர்கேடுகள் வளர்ச்சியடைந்த செல்கின்றன.

பொருளாதாரத்தின் உற்று நோக்கல்கள் சரியான திட்டத்தின் அடிப் படையில் நிறைவேற்றப்பட வேண்டும். பொருளாதாரம் என்ற சொல் பணம், வேலைவாய்ப்புகள், பொழுதுபோக்குள், கல்வி அறிவு, உணவு, உடைகள், உறையுள், சுதந்திரமாக செயற்படும் தன்மைகள், சரியானமருத்துவ வசதிகள், தேவைகள் நிறைவேற்றக்கூடிய நிலைமைகள், அடிப்படை வசதிகள், திருமண தடைகள் அற்ற நிலைகள், பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான செயற் பாடுகள், என அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வாறன செயற்பாடுகள் எல் லாத்தர மக்களுக்கும் கிடைப்பதில்லை.

மக்களின் வாழ்வாதாரம் சரியாகவும் சிறப்பாகவும் போதுமென்றளவில் அமையப்பெற வேண்டும். சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை பொரு ளாதாரம் என்றது சொல்லலவில் மட்டுமின்றி செயல்கள் வடிவங்களாகவும் தோற்றமுற்று நிற்கின்றன.

**சபீசன் – வர்த்தகபிரிவு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறுகால நீதி



இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 34வது கட்டத் தொடர் ஜெனிவாவில் இடம் பெற்ற போது, ஐ.நாவினால் பரிந்துரைக் கப்பட்ட புதிய அணுகுமுறையினை நிலைமாறு கால நீதியின் படி முறைகள் எவ்வாறு செயலாக்கம் பெற்றுள்ளது என விரிவாக ஆரா யப்பட்டது.

இப்படிமுறைகளில் உண் மையைக் கண்டறிதல், உரிய முறையில் விசாரணை நடத்துதல், இழப்பீடு வழங்குதல், நிறுவன ரீதியான மறு சீரமைப்பு முறைகள், பாலியல் வன்முறை தொடர்பான விசாரணைகள், கடந்த கால முரண்பாடுகள் தொடர்பான முக்கிய சம்பவங்களை நினைவுபடுத்துதல், நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்த ஏற்படுத்தவுள்ள முயற்சிகள் என்பன இதில் அடங்கும்.

## நிலைமாற்றம்

பாரிய அளவில் இடம்பெற்ற வன்முறைகளில் இருந்து சமாதானம் நல்லி ணக்கம் என்ற பயணத்தை நோக்கிய ஓர் அர்ப்பணிப்புக்களை மாற்றம் ஏற்படுவதை நிலைமாற்றம் குறித்து நிற்கின்றது. இப்பயணத்தில் பாதிக்கப்பட்டவர்கட்கான நீதி பொறுப்புக் கூறுதலை உறுதி செய்வதாக அமைய வேண்டும் என ஐ.நா வை எதிர்பார்க்கின்றது.

இதற்கான பல செயன்முறைகளையும், பொறிமுறைகளையும், சமூக பக்கங் களோடு செயற்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நியாயமான நீதி கிடைப்பதை ஐ.நா உறுதி செய்கின்றது.

போர்க்குற்றம் எதனைக் குறிக்கின்றது. சர்வதேச குற்றவியல் நீதி மன்றின் ரோம் விதியின் 8வது சட்டப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள மனிதாபிமான சட்டங்களை கவனத்தில் கொள்ளாது ஆயுதப் போராட்டங்களின் போது செயற்ப்படும் அத்துமீறிய குற்றங்களே போர்க் குற்றங்களாகும். இவை போராளிகளன்றி, பொது மக்கள் பெண்கள், சிறுவர் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளாகும். இவற்றில் கொலை, சித்திரவதை, ஆட்கடத்தல், வன்புணர்வு, பணயக் கைதிகளாக்குதல், என்பன அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக் கூறுதல்

உயர் அதிகாரம் கொண்ட பதவிகளில் இருப்போர் கடமையைச் செய்ய வேண்டிய பொறுப்பு உடையவராக இருக்கும் போது அதனைச் சரிவரச் செய்யாது தவறின் குற்றத்திற்கான பொறுப்பக் கூறும் பொறுப்பினை அவர் எற்றுக்கொள்ள வேண்டும்.

படையினரது நடத்தைகட்கு படைத் தலைவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்னும் நிலத்தினை உள்ளூர் சட்டங்களில் மட்டுமின்றி போரின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள், சட்டங்கள் தொடர்பாக 1899, 1907ஆம் ஆண்டு ஹேக் நகர் பரிந்தரைகள் மூலமும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எந்த ஒரு குற்றத்தையும் அவரின் கீழ் பணிபுரியும் பணியாளர் செய்திருப்பின் அவரது உயர் அதிகாரி அக்குற்றம் நடந்திருப்பதை அறிந்திருந்தால் அவர் அக்குற்றத்தை செய்திருக்க முடியும் என நம்பமுடிந்தால் அவரை பொறுப்புக் கூறலில் இருந்து விடுவிக்க முடியாது. ஆகவே தனிப்பட்டவர்கள் பொதுத்துறை அலுவலர்கள் யாவரும் அவர்களது செயல்களுக்காக பொறுப்புப் கூறவேண்டியவர்களே!

அரசாங்க அலுவலர்கள் சமூகத்தின் கூடிய நலன்களுக்காக செயற்படும் கடப்பாடும் பொறுப்பும் கொண்டவர்கள் ஆவார்.

## உண்மையைக் கண்டறிதல்

உண்மையைக் கண்டறிதல் முறைசார், முறைசாரா பொறிமுறைகள் அடங்கும். உண்மைக்கும், நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுக்கள் முறைசார் பொறிமுறையாகும். இவை அரசாங்கத்தால் அதிகார மளிக்கப்பட்ட நிறுவன அமைப்புக்கள் ஆகும். இவற்றின் நோக்கம் பாதிக்கப்பட்டவர்க்கு நியாயம் வழங்குவதாக இருந்த போதிலும் பொது மன்னிப்பு வழங்குவது நோக்கமல்ல. ஆயினும் தென்னாபிரிக்காவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பொது மன்னிப்பை முன்னிலைப் படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாணைக்குழுக்கள் சாட்சியங்கள் மூலம் தமக்கத் தெரிந்த தகவல்களை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. இப்பதிவுகள் மூலம் அறிக்கை தயாரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட வர்களின் துயரங்கட்கு ஆறுதல் அளிக்கும் செயல்முறைகளையும் உருவாக்க வழிவகுக்கும்.

முறைசாரா வகையிலான உண்மையைக் கண்டறியும் பொறிமுறை பல வகைப்படும் இதன் மூலம் அடிப்படைத் தகவல்கள் பலவற்றைப் பெற முடியும். வரலாற்றுத்துறை சார்ந்தோர், அரசசார்பற்ற அமைப்புக்கள், ஊடகத்துறையினர் ஆகியோரது அறிக்கைகள், அவர்களது அனுபவங்கள் மற்றும் வாய்மூல சாட்சியங்கள் இதனுள் அடங்கும்.

நிறுவனங்களை சீர்திருத்தும் முக்கியத்துவம், நிலைமாறு கால நீதி தொடர்பில் எதிர்காலத்தில் வன்முறைகள் இடம்பெறாது தவிர்க்கும் வகையில் அவற்றோடு தொடர்புடைய நிறவனங்களை சீரமைத்து பலப்படுத்துவது அவசியமாகின்றது. சட்டமுறையிலான சீர்திருத்தம், நீதித்துறை சுதந்திரம், ஊடகங்கள் வகிக்கும் பங்கு, பாடசாலை பாட விதிவுரைகள், போன்றவை தொடர்பில் சீர்திருத்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகின்றது. இவ்விடயத்தில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பல விடயங்களை ஆராய்ந்து சிபாரிசுகளை அறிக்கையிடும்.

## இழப்பீடு வழங்குதல்

தனிப்பட்டவர் மற்றும் சமூகங்களின் உரிமைகள் பாரதூரமாக உரிமை மீறப்பட்ட வகையில் பாதிப்படைந்திருப்பின் அவற்றை சரி செய்தலையே இழப்பீடு (வழங்கல்) குறிக்கின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்கட்கு நாட்டின் பூரண அங்கீகாரத்தை வழங்கி அவர்களது உரிமைகள் மீறப்பட்டதற்காக மற்றும் அதனால் ஏற்பட்ட வடுக்கள், துன்பங்கட்கு ஆவண செய்தல் என்பனவும் இழப்பீட்டில் அடங்கும்.

இவற்றுள், மீட்டளிப்பு, நட்டஈடு, மீள்கட்டுமானம், புனர்வாழ்வு, நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்திற்கு பங்களித்தல் என்பன அடங்கும்.

**இழப்பீடு வழங்குதலில் பலதரப்பு முடிவுகள் கையாளப்படலாம்.**

- நட்டஈடு சேதங்களுக்கான கொடுப்பனவு
- மீள்கட்டமைப்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் சேவைகள் கல்வி, சுகாதாரம், மனநலம், பொருளாதாரம்
- சட்ட உதவி, ஓய்வூதியம் என்பன அடங்கும்
- மீட்டளிப்பு, முடிந்தவைரை முன்பிருந்த நிலைக்கு திரும்ப உதவுதல் - மீள் தொழில் வாய்ப்பு, காணி மீளளிப்பு, சேதமடைந்த சொத்துக்களை மீள கைய ளித்தல் என்பன அடங்கும்.
- இறந்தவர்களை முறையாக அடக்கம் செய்தல், நினைவு கூறுதல், சடங்குகள் செய்தல் போன்றன அடங்கும்.

**அடையாள பெறுமானம் கொண்ட இழப்பீடு**

- வன்முறைகட்கு பொறுப்பானவர்கள் பகிரங்க மன்னிப்புக் கோருதல்,
- பாதிக்கப்பட்டவர்கட்கு விரும்பும் பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட நினைவுச் சின்னங் களை நிர்மாணித்தல்
- தேசிய மட்ட நினைவு கூரும் நாட்களை ஏற்படுத்தல்
- காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிதல், அதற்கான பொறிமுறைகளை ஏற் படுத்தல்
- இழப்பீடு வழங்குவதன் நோக்கம் பாதிக்கப்பட்டோர் மனரீதியில் திருப்தியடைந்து, மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது தடத்தலுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம் ஓர் பார்வை



"பெண்ணியம்" என்ற சொல் எமக்குப் பொருத்த மில்லாத சொல். எப்படியோ எம்மிடம் வந்து சேர்ந்து விட்டது. இதனைப் புகுத்தியவர்கள் பெண்ணியத்தை தாண்டி எங்கோ சென்றுவிட்டனர். ஆனால் நாமோ பெண்ணியம் என்பதனை சரியான புரிதல் இன்றி தடுமாறுகின்றோம். பெண்ணியம் அதாவது Feminism என்ற ஆங்கிலப் பதம் Femina (பெமினா) என்ற இலத்தீன் மொழியிலிருந்தே உருவானது. இதன் அர்த்தம் பெண்மைக்குரிய இயல்புகள் உடையவள் என்பதே. இச்சொல் எம்மிடம் பெண்ணியமாகவும், பெண்நிலை வாதம் என பல பொருளில் காட்டப்படுகின்றது.

தாய்வழிச் சமூக மரபு வழியில் தாயின் தலைமையில் குடும்பங்கள் காலா காலமாக இயங்கி வந்துள்ளது. அதன் தொடர்ச்சி இன்றும் மறைந்து போகவில்லை. எனினும் ஆணாதிக்கத்தின் இடைச் செருகல் அடக்கு முறைகள் படிப்படியாக மேலோங்கி தாய் வழிச் சமூக நிலைப்பாடு வீழ்ச்சி கண்டது. இதனை சாதகமாகக் கொண்ட தன் விளைவு பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் சுதந்திரம், உரிமைகள் மறுக்கப்பட்டன. ஒடுக்கப்படும் எந்த ஓர் சமூகமோ, இனமோ, காலப்போக்கில் தமது விடிவிற்காக, உரிமைகட்காக, சுதந்திரத்திற்காக கிளர்ந்தெழும் என்பது வரலாறு. ஆகவே பெண்களும் தமக்கெதிரான கொடுமைகட்கு எதிராக எதிர்ப்புக் குரல் கொடுக்க ஆரம்பித்தனர். இப் புரட்சியானது 18 ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாகியது. 1885 இல் காசீம் அமீன் என்பவர் புதுமைப் பெண் என்ற நூலை எழுதினார். இது ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சீமோன் டீ டீ பேபர் இரண்டாவது பாலினம் (The Second Sex) என்ற நூலை அடித்தளமாகக் கொண்டு பெண்ணியம் ஓர் அறிவுசார் கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக் கப்பட்டது. 1871இல் பிரான்ஸ் நாட்டின் பெமினிசம் என்ற சொல் அறிமுகப்படுத்தப் பட்டது. எனினும் 19ம் 1872இல் அலெக்சாண்டர் டூமஸ்பில்ஸ் என்ற பிரான்சிய எழுத்தா ளர் பெண்கள் ஆண்களால் வழிநடத்தப்படுகின்றார்கள் என்ற கருத்தை ஆணித்தர மாக முன்வைத்தனர்.

1840இல் பெண்களின் உரிமைக்கான இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 19ம் எனினும் நூற்றாண்டின் இடைக்காலப் பகுதியிலேயே பெண்ணின் இருப்பு குறித்த சிந்தனை, அவர்கள் சமூக பொருளாதார நிலை குறித்த கேள்விகள் சிறிது சிறிதாக கேள்விகளாக பரிணமித்தது. இந்தியாவில் 1960இன் பிற்பட்ட காலப்பகுதியிலே பெண்ணியம் பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. பெண்ணியம் என்ற சொல் அதன் சித்தாத்தங்கள் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டமையால், பெண்ணியம் என்ற சொல் வெறுப்பிற்குரிய ஒரு பதமாக, தவறான புரிதலுடன் பரவிக்கிடக்கின்றது. பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம், மற்றும் தமது ஆளுமைக்கான சுதந்திரத்தை பேசுவது, சுதந்திரமாக செயற்படுவது என்பனவும், சதந்திரமாக தமது செயற்பாட்டை தேர்தெடுத்துக் கொள்வதுமே பெண்ணியமாக கருதலாம்.

எப்படியாயினும் பெண்ணியத்தின் பிறப்பு 19ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. சமூகவியலாளரான சார்ஸ்ஸ் பியூரி என்பவர் முதன் முதலாம் பெண்ணியம் என்ற சொல்லை 1837இல் கையாண்டார்.

இச்சொல் இவ்வாறாக விரிவடைந்து இன்று விமர்சனங்களின் மத்தியில் நிற்கின்றது. எங்கேயாவது உரிமைகள் மறுக்கப்படும் போது அவற்றைப் மீட்டெடுப் பதற்காக பாதிக்கப்பட்டவர்கள் கிளர்ந்தெழுவது வழக்கம் இவை எந்தெந்த காரணங் கட்காக இவ்வுரிமைகள் பறிக்கப்பட்டனவோ அவற்றைக் குறிவைத்தே இவ் எதிர் வினைச் செயற்பாடுகள் அமைகின்றன. பெண்ணியம்சார் குழுக்கள் பல்வேறு வகைப் பட்டன. சமவுரிமைக்காக போராடுபவர் ஆணாதிக்க எதிர்ப்புக் குழுக்கள், நிலம்சார் குழுக்கள், பாலியல் சுதந்திரம், இப்படி பல வகை வேறுபாடுகளை முன்வைக்கலாம்.

பெண்கள் உடை உடுத்துவது தொடக்கம், பொது இடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது வரை பெண்களுக்குக் கட்டுப்பாடுகளை விதித்து அவர்கள் சுதந்திரமாக செயற்படுவதை சகம் தடுக்கின்றது. பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை வேறுயாரோ தீர்மானிக்கின்றனர். இன்று வரை பெண்ணின் வாழ்க்கை வேறு ஒருவர் கையில் தான் உள்ளது இதனால் ஏற்படும். மனமுறிவுகள் மனமுறிவில் முடிகின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் விவாகரத்துக்கோரும் பெண்க ளின் தொகை அதிகரித்தே காணப்படுகின்றது. பெண் மறுதிருமணம் செய்தல் கூட கேள்விக் குறியாகவே உள்ளது. கலாசாரம் என்ற புதைகுழியுள் எல்லாமே புதைக் கப்படுகின்றது. மௌனம் காக்கும் பெண்கள் இதனை ஏன் மீளாய்வு செய்யச் கூடாது. ஓர் பெண் குழந்தை பிறக்கும் போதே விதிக்கப்படும் கட்டுப்பாடு மரணம் வரை தொடர்கின்றது.

இன்றைய பெண்ணியம் பேசுபவர்கள் தாம் பெண்ணியவாதிகள் என காண்பிப்பிப்பதற்கு பாலியல் சுதந்திரம், விடுதலை என்பதை கையிலெடுக்கின்றனர். இது தவறான கோட்பாடு. பொது வெளியில் பாலியல் பற்றியோ, பாலியல் உறுப்புக்கள் பற்றியோ, வெளிப்படையாகக் கூறுவதானால் பெண்ணியம் விழிப்படைந்து விட்டதென் பதல்ல. நான் ஓர் பெண்ணியல் வாதி அல்ல. ஒவ்வொருவரும் பெண்கள் முன்னெற் றத்தில் ஏதாவது செய்ய முடிந்தால் பெண்ணியம் பேச வேண்டிய தேவை ஏற்படாது. ஆடைக்குறைப்பு, தான்தோன்றித் தனமாக நடத்தல் இவற்றிற் கெல்லாம் பெண்ணி யத்தை சாட்டாக பயன்படுத்த வேண்டவே வேண்டாம். பெண்கள் பலர் நிறையவே நல்லது செய்கின்றனர். அவர்களை விலத்திடுவோம். அவர்கள் பெண்ணியப் போர்வை போர்ப்பதில்லை. நான் இப்படித்தான் உடுப்பேன் என் உடம்பை இப்படித் தான் காண்பிப்பேன் என்பவர்கள் பற்றி எதுவும் சொல்லப் போவதில்லை. அதுவும் சுதந்திரம் தான். ஆனால் அவன் இங்கு பார்க்கிறான் அங்கு பார்க்கிறான் என்றெல்லாம் முறைப்பாடு வேண்டாம். இவையெல்லாம் இல்லாது பெண்கள் முன்னெற வழிகாட்டும் எவளும் பெண்ணியல் வாதியே.

**சரோஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பெண்களை வலுவூட்டலும்



வெகுஜன ஊடகங்களில் ஒன்றான இணையத்தின் இன்னொரு வளர்ச்சிப் படிநிலையே சமூக ஊடகங்கள் ஆகும். குறிப்பாக ஏனைய பிரதான ஊடகங்களில் வெளிவரமுடியாத விடயங்களை வெளிப்படுத்துவதிலும் தனிநபர்களின் தனிப்பட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்வதிலும் முன்னணியில் இருக்கும் சமூக ஊடகங்களை மாற்று ஊடகங்கள் (Aiternative Media) என்றால் அது மிகையில்லை எனலாம்.

சமூக ஊடகங்களின் தனிச்சிறப்பே அதன் உடனடித்தன்மையும், பாவனையாளரின் பாவனையை மையப்படுத்திய அதன் செயற்பாடுகளுமே ஆகும். இதனாலே இளைய சமூகத்தினர் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் ஊடகமாக அதனைப் பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய முகநூல் டுவிட்டர் யுரியூப் இன்ஸ்டகிராம் (Instagram) வலைப் பூக்கள் போன்ற பல்வேறுபட்ட சமூக வலைப்பின்னல்களை தகவல் பரிமாற்றத்தின் வழியே சமூக ஊடகங்களாக பிரஜைகள் ஆகிய நாமே மாற்றியமைத்துள்ளோம். இருப்பினும் இந்த ஊடகங்களில் பெண்களின் நிலையும் பெண்கள் தொடர்பான மாதிரி வார்ப்புக்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பற்றிய கருதூட்டல்கள் உண்மையில் பயப்பீதியை ஏற்படுத்துபவனவாகவே உள்ளன.

அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வொன்றில் ஆண்கள் மற்றும் பெண்களின் சமூக ஊடகப்பாவனையில் ஆண்கள் 66 சதவீதம் இதனை பயன்படுத்த பெண்கள் 76 சதவீதத்தினர் சமூக ஊடகங்களை நாடுகின்றனர் என்ற உண்மை கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் பெண்களின் சமூக ஊடகப்பாவனை எவ்வளவு தூரம் அவர்களின் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு துணை புரிகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள்

பெண்கள் குறிப்பாக முகநூலில் பதிவிடுகின்ற புகைப்படங்களை தவறான நோக்கங்களுக்கு ஒரு சிலர் பயன்படுத்த முனைகின்றனர். அவற்றை போட்டோ மோர்பிங் (Photo Morphing) என்கின்ற தொழில்நுட்பத்தின் ஊடாக முகங்களை மட்டும் தனியே எடுத்து வெவ்வேறு உடல்களை அத்துடன் இணைத்து அவற்றை ஆபாச இணையத்தளங்களில் வெளியிடுகின்ற ஒரு சிலர் இருக்கின்றனர்.

அடுத்து சமூக ஊடகங்களில் பெண்களின் நண்பர்கள் பட்டியலில் எப்படி யாவது இணைந்து கொண்டு அவர்களை ஆபாசமாக ஏசுதல் இரட்டை அர்த்தமுள்ள வசனங்களைப் பிரயோகித்தல், பெண்களது உள்பெட்டிகளில் ஆபாச அழைப்புக் களை விடுதல் அல்லது பெண்களுடன் எப்படியாவது சட்டிங் (Chating) முறை மூலம் உரையாடல்களை மேற்கொள்ளுதல் பின்னர் அவற்றைக் காட்டியே அவர்களை மிரட் டுதல் போன்ற பல வன்முறைகள் சமூக ஊடகங்களின் வழியே அரங்கேறுகின்றன. ஏனைய நாடுகளில் இருப்பது போன்று இது போன்ற இணைய வழிக்குற்றங்களை (Cyber Crime) உடனடியாக கண்டறிந்து அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் நமது இலங்கையின் காவல்துறை மந்தமாக இருப்பது இது போன்ற குற்றங்கள் அதிகமாகப் பெருகுவதற்கு அடிப்படைக் காரணங்களாகும்.

போலி முகவரிகள் (Fack Id) பெண்களின் சமூக வலைத்தள முகவரிகளைத் திருடி அதில் தமக்குத் தேவையான விடயங்களை பதிவு செய்யும் முறைகள் (Hacking) போன்றவற்றால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பலதும் இச்சமூக ஊடகங்களில் இடம் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த இணையத்தின் ஊடாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த இணைய உலகில் (Virtual World) பயணிக்கும் பல பெண்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றிய அறிவு குறைவாகவே உள்ளது. குறிப்பாக சமூக ஊடகங்களை ஆரம்பித்தல், அதில் நண்பர்களை தேர்ந்தெடுத்தல், தகவல்களைப் பகிர்ந்து கொள்ளு தல், போன்றவை தொடர்பாக முற்கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டு அதன் பின்னர் கணக்கினை (Account Creation) ஆரம்பித்தல் நன்மை பயக்கும்.

மத்திய கிழக்கு நாடகளில் பெண்களின் சுதந்திரத்திற்கு பல்வேறுபட்ட தடைக் கற்கள் இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். அங்கு குறித்த சில நாடுகளில் பெண்களின் சமூக ஊடகப் பாவனைகளும் தடைசெய்யப்பட்டிருப்பதுடன் அதை மீறு பவர்களுக்கு கசையடிகள் மற்றும் மரணதண்டனைகளே விதிக்கப்படுகின்றமையும் சமூக ஊடகங்களின் ஊடாக பெண்களின் குரல்கள் வெளியே வருவதற்கான சாத் தியப்பாட்டை எடுத்துச் சொல்கின்றது.

## சமூக ஊடகங்களின் ஊடாகப் பெண்களை வலுவூட்டல்

பெண்களின் உரிமைகள் அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற வற்றை சமூக ஊடகங்கள் வெளியிடுவது பயனளிக்கும் ஒரு செயன்முறையாகும். பெண்களது குழுக்கள் மற்றும் பெண் உரிமைகளுக்கான அமைப்புக்கள் போன்ற வற்றை சமூக வலைப்பின்னல்கள் ஊடாக ஒன்றிணைப்பதும் பெண்களை வலுவூட்ட துணைபுரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறிப்பாக முறைப்பாடுகளை செய்யக்கூடிய இடங்கள், பால்நிலை சார்ந்த வன்முறைகளை கையாளுவது தொடர்பான அறிவூட்டல்கள், அறிவுறுத்தல்கள், சிறு பிள்ளைகளுக்கான பால்நிலை சார்ந்த தெளிவுறுத்தல்களை முகநூல் போன்ற சமூக ஊடகத்தின் ஊடாக வெளிப்படுத்தலாம்.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்கள், சமயல் தொழினுட்பம் சார்ந்த விடயங்கள் அரசியல், சமய, சமூக விடயங்கள் போன்றவற்றை கலந்துரையாடும் களங்களாக சமூக ஊடகங்கள் மாற வேண்டும். குறிப்பாகப் படித்த பெண்கள் தமக்குத் தெரிந்த விடயங்களை தமது சமூகம்/கிராமத்தில் இருக்கக்கூடிய ஏனைய பெண் களுக்குத் தெரிவிக்கும் வலைப்பின்னல்களை முகநூல்களின் ஊடே செயற்படுத் துவதும் சிறந்த பொறி முறையாகும்.

இலங்கையில் இணையப்பாவனையில் ஆண்களும் பெண்களும் அதிகமாக சமூக வலைத்தளங்களில் முன்னணி வகிக்கின்றனர். இருப்பினும் அவற்றில் பெரும்பாலானவை தமது சுய விபரங்களை பகிர்ந்து கொள்வதாகவோ தாங்கள் கலந்து கொண்ட நிகழ்வுகள் பற்றிய பதிவுகளாகவோ இருக்கின்றது.

பிங்க்ஸ்டிங் (Pink Stinks) என்கின்ற ஜக்கிய இராச்சியத்தை சேர்ந்த ஒரு இணையத்தளம் றோஸ்/பிங்க் எனும் நிறமானது எவ்வாறு பெண்களின் அடையா ளமாகவும், மாதிரி வார்ப்பாகவும், மாற்றப்பட்டுள்ளது என்பது பற்றிய விழிப்பணர்வுப் பிரச்சாரத்தை பரப்புவதற்கு முகநூல் மற்றும் டுவிட்டர் எனும் இரண்டு சமூக ஊடகங்கள் மூலமாகவே பணியாற்றினார்கள். அது போல ஆபிரிக்காவில் உள்ள பெண்ணுறுப்பைச் சிதைத்தல், (Genitial Mutiation) எனும் சடங்கிற்கு எதிரான "ஏவாளிகளின் பிள்ளைகள்" என்கின்ற பிரசாரத்தை உலகெங்கும் பரப்புவதற்கு துணை புரிந்ததும் இந்தச்சமூக ஊடகங்களே ஆகும். இது பெண்களின் கையிலேயே உள்ளது.

**கிருத்திகா தருமராஜா**
**அருட்குமரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதை உள்ளம்



கற்றறிந்த பாடங்கள் பல
கல்லாத பாடத்தின் உன்காதல்
பேதை மனம் படும்பாடு
பூப்படையவில்லையா?
உன் மனம்

போராடும் சக்தி இல்லை
எனக்கு - கொஞ்சம் உன் பார்வைகள்
படாதோ என்னில்

பூக்கள் கோத்திட நீ!
புன்னகை பூத்திட மாட்டாயோ
பூமியில் என் காலம் முடிய முன்
என் காதல் இசையை
மீட்டிடமாட்டாயோ!
கைக்குழந்தாய் போல நீ
என் கைகளில் தவழமாட்டாயோ?
இறக்கும் தருவாயிலும்
உனக்காகவே நான்
உயில் எழுதிவிட்டேன்.............................!

## பெண்களின் புகழிடம்

பெண் என்ற கருவில் பூமியில்
பிறந்தோம் - தோற்றிட தோற்றிட
துணிவுகள் எங்கே?
போற்றிட யாரும் உலகினில் இல்லை
தூற்றிட பலரும் இருப்பது புரிவதில்லை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடும் மனம் பொன்னான மனமே!

சோதனைகள் ஆயிரம் தான் சொல்லிட
முடியாது - வேதனைகள் ஆயிரம் தான்
வெட்டிட முடியாது
பூமி பந்தின் மாற்றங்களே !
எம்மை மாற்றிடும் சக்திகள் !
வாழ்க்கை என்பது
அதுவல்ல.............................!

மது
யாழ்ப்பாணம்

## வெற்றி



வெற்றி என்பது
இலகு அல்ல!

சாதித்தவனிடம்
கேட்டுக்கொள்!

அதன் வலிகளையும், வேதனைகளையும்,
துன்பங்களையும், சோதனைகளையும்,
கழித்த பின்
நூற்றின் ஒரு வீதமே!

## சுவடுகள்

ஒவ்வொறு விநாடியும் !
ஒவ்வொறு நிமிடமும் !
ஒவ்வொறு மணித்தியாலமும் !

ஒவ்வொறு நேரமும் !
ஒவ்வொறு நாளும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒவ்வொறு கிழமையும் !
ஒவ்வொறு மாதமும் !
ஒவ்வொறு வருடத்தின் !
முடிவுகளும் !
உன் ஆயுள் நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது
ஓடி முடிக்க வேண்டிய பயணப்பாதைகள்
பல நிறைவின்றிக் கிடக்கின்றன!
பல புதிய பாதைகள் உன்னால்
செதுக்க வேண்டியுள்ளது!
பல்வேறுபட்ட கேள்விகளுக்கு பதில் கூறவேண்டியுள்ளது
படைக்க வேண்டிய சாதனைகளோ பல!
கிடைத்த நேரங்களோ சில
பார்த்திருக்க நேரமில்லை !
படுத்துறங்க காலமில்லை !
பாதைகளின் ஒவ்வொறு அடிகளும் உன் மரணத்தின் பின்னும்
பதிக்க வேண்டிய அடிச்சுவடுகளே !
உன் கடைசி இலக்கு மரணமே!
அறை நோக்கியே!
வாழ்க்கை நகர்கின்றது;
இன்று என்பதை
பயன்படுத்து!
நாளை என்பது
இல்லையென்றாகிடும்
சில கணப்பொழுதில்.




பாலு – வர்த்தகபிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பெண்கள்

பெண்கள் அரசியலில் பங்குபற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு காலா காலமாக இடம்பெற்றிருந்த போதிலும் அவர்களது நேரடியான பங்களிப்பு பாராளு மன்றிலோ, உள்ளூராட்சி சபைகளிலோ குறைவானதாகவே காணப்படுகின்றது. போரின் பின் இடம்பெற்றுவரும் நல்லிணக்க சமாதான செயற்பாடுகளில் பெண்கள் இடம்பெறுவது அவசியமானதாகும்.

ஐ.நா.பாதுகாப்பு சபையின் 1325 சமவாயத்தின் சிபாரிசுகள் இலங்கை அங்கீகரிக்கா விட்டாலும் அச்சமவாயத்தின் தாக்கம் இலங்கையில் பெண்கள் மத்தியில் ஏற்புடையதாகவே கருதப்படுகின்றது. பெண்கள் உயர்பதவிகளை பெற்றுக் கொள்ளுதல், போர்க்கால சூழலில் பெண்கள் பாதுகாப்பு, அரசியலில் அவர்களது பங்களிப்பைக் கூட்டுதல் என்பன பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகளில் முக்கிய இடம்பிடித்தள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையம் அரசியலில் பெண்கள் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் வகையில் பெண்கள் அரசியல் செயலணி என்ற தனிப்பட்ட பிரிவாக அமுலாக்கி பெண்களின் அரசியல் பிரவேசத்தை ஊக்குவிப்பதற்கு முயன்று வருகின்றது.

உள்ளூராட்சி மன்றத்திற்கான தேர்தல் இடம்பெறவுள்ள இக்கால கட்டத்தில், அரசியலின் முதற்படியாக உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் போட்டியிடு வதற்கான ஓர் தளத்தை ஏற்படுத்தும் வகையில் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் அரசியலில் பங்குபற்ற ஆர்வம் கொண்ட பெண்களை இனம் கண்டு அவர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளை 2016ல் ஐந்து மாவட்டங்களிலும் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் பின்போடப்பட்ட காரணத் தினால் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான தொடர் பயிற்சிகள் 2017 ம் ஆண்டிலும் நடத்தப்பட்டது.

மேலும் உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு பற்றும் பெண்கள் அரசியல் கட்சித் தலைவர்களோடு நேரில் கலந்துரையாடும் சந்தர்ப்பங்களையும் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்படுத்தி வருகின்றது.

ஆயினும் பெண்கள் அரசியலில் பங்குபற்ற வேண்டுமாயின் அவர்களது தனி விருப்பத்திற்கப்பால் கட்சிகள் அவர்களை தமது கட்சி சார்பாக நியமித்தல் வேண்டும். இவ்வொழுங்குகள் பாரபட்சமின்றி செயற்படுமாக இருப்பின் பெண்களுக்குரிய நியாயமான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் அரசியலில் ஈடுபடும் பெண்களின் ஒன்றுகூடல்



## அரசியலில் பெண்கள் ஈடுபடுவதற்கான பயிற்சிக் களம் வவுனியா



## பெண்களின் அரசியலில் ஈடுபாட்டை ஊக்கப்படுத்துதல் தொடர்பாக """"ராஜா கிறீம் கவுஸ்"""" விடுதியில் நடைபெற்ற கருத்தரங்கு





போர்க்கால சூழலும் அதன் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய அரசியல் செயற்பாடுகளும் என்ற தொனிப்பொருளில் 04.03.2017 லும் 05.03.2017 லும் இக் கருத்தரங்கு 30 பேரை எண்ணிக்கையாகக் கொண்டு நடைபெற்றிருந்தது.

இவர்கள் யாழ்ப்பாணம்இ கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, கண்டி, மாங்குளம், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் இருந்து வருகை தந்திருந்தனர். இங்கு முக்கியமாக போர்க்கால சூழலுக்கு முற்பட்ட நிலவரங்களும் போர்க்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னைதிரேசாவின் ஞாபகார்த்த தின ஒன்றுகூடல்



***"Do not Wait for Leaders, Do it alone Person to Person"***

24.01.2017ம் ஆண்டின் மறைந்தும் அனைத்து உள்ளங்களிலும் மறையாமலும் இருக்கும் அன்னை திரேசாவின் ஞாபகார்த்த நினைவு ஒன்றுகூடலில் பலரும் அங்கு உரையாற்றியிருந்ததுடன் அங்கு பல நிறுவனங்களில் இருந்தும் பல பாடசாலை மாணவர்களும் அன்னை திரேசா அணியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அங்கத்தவர்களும் அங்கு வருகை தந்திருந்தனர்.


இவ் ஒன்றுகூடலில் அன்னை திரேசாவின் சிறந்த எடுத்துக்காட்டுகளும்இ சிறப்பான நடவடிக்கைகள் மற்றும் அவரின் பொறுப்புக்கள் கடமைகள் பற்றியும் எனிவரும் இளம் சமூதாயத்தினருக்கும் அனைவருக்குமாக விளங்க விளக்கிக் கூறப்பட்டிருந்தது.





## பாலியல் வன்முறையால் பலியாக்கப்பட்ட பெண்கள் பாதுகாப்பு

### ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் சம்பவம் தொடர்பான கலந்துரையாடல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்துறை கரம்பொன் பகுதியில் ஜனவரி 24ம் திகதி அடித்து கோரமாக கொலை செய்யப்பட்ட ஞானசேகரன் மேரி ரம்சியா என்ற (27 வயது) ஏழு மாதக் கர்ப்பிணிப்பெண் தொடர்பாக பல கேள்விகள் சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையிலும் அப்பெண்ணின் கொலை எவ்வாறான சூழலில் வாழ்ந்து வந்தார் என்பதை அறிய வேண்டிய தேவை எமக்கு ஏற்ப்பட்டதால் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் குழுவினர் நேரடியாகவே சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று மேலும் பல விசாரணைகளை அப்பெண்ணின் வீட்டின் அயலவர்களிடமிருந்தும் சில பெரியோர்களிடமிருந்தும் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திலும் கலந்து ஆலோ சிப்பதற்காக எமது அணி அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும் .

## வாழ்த்து மடல் தயாரிப்பதற்கான பயிற்சி நெறி

மகளிர் அபிவிருத்தி நிலைய சுயதொழில் வாய்ப்பில் ஈடுபடும் பெண்களை ஒன்று திரட்டி வாழ்த்துமடல் தயாரிப்பதற்கான பயிற்சி நெறியை 11.02.2017 ல் வேலணை மற்றும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து அப்பெண்களை ஊக்கபடுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் மற்றும் அவர்களுக்கு ஓர் சிறு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இப்பயிற்சி நெறியை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

இப்பயிற்சி மூலம் பயன் அடைந்த பெண்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்த்து மடல்களை தயாரித்து வருகின்றனர். இவர்களால் தயாரிக்கப்படும் வாழ்த்து மடல்களை மகளிர் அபிவிருத்தி நிலையம் சேகரித்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது குறிப்பிடத் தக்கது.

## பெண்கள் வாழ்த்துமடல் தயாரிப்பில் ஈடுபடுகின்றனர்



இப்பயிற்சி நெறியை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதோடு மேலும் பல பெண்களை ஊக்கப்படுத்துவது எமது நோக்கமாகும். இதனுடாக பல பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதோடு சிறந்தவொரு செயற்த்திட்டமாக நாம் நடாத்தி வருகின்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துமடல் தயாரிப்பதற்காக பயனாளி ஒருவருக்கு கணனி வழங்கப்பட்டது**



## கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு காணி தொடர்பான பிரச்சினைகள்

பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. போர்க்கால சூழ்நிலைகள் மாற்றம் பெற்ற போதும் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்களால் பொதுமக்கள் இன்னும் பிரச்சனைகளுக்கு ஆளாகிக் கொண்டே இருக்கின்றனர்.

உதாரணமாக :- முல்லைத்தீவு பிரிவு கோப்பாபிளவு, புதுக்குடியிருப்பு, பிலக்குடியிருப்பு, துரபுரம், முள்ளிக்குளம் வட்டுவாகல் மன்னார் பிரிவு மறிச்சுக்கட்டி, பாலைக்குழி, கரடிக்குழி கிளிநொச்சி பிரிவு பன்னங்கண்டி வவுனியா பிரிவு செட்டிக்குளம் மெனிக் பாம் நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்ட 6 ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்றும் விடுவிக்கப்படாமல் உள்ளன.

தாம் பூர்வீகமாக வாழ்ந்து வந்த வதிவிடங்களில் வாழ வேண்டும் என்ற உரிமைக் குரலோடு இடம்பெயர்ந்து தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் பெண்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட வருகின்றனர். ஜனவரி 31ம் திகதியிலிருந்து தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளின் முகப்பை பார்த்த வண்ணம் வெய்யில் குளிர் என்று பாராது ஒன்றிணைந்த போராட்டத்தை முனைப்போடு நடத்துகின்றனர். போராடி வருபவர்களில் பலர் பெண் தலைமைத்துவ குடும்பங்கள். இக் குடும்பங்களில் பலர் இராணுவத்தினரால் பிடிபட்டு விடுக்கப்படாது உள்ளனர்.

## மகளிர் அபிவிருத்தி நிலைய அரசியல் பிரிவினர் கேப்பாப்பிலவில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடும் பெண்களை சந்தித்தல்



கேப்பாப்பிலவு



புதுக்குடியிருப்பு





கேப்பாப்பிலவு

போராடி வரும் புதுக்குடியிருப்பு, கோப்பாபிளவு மக்களுக்கு ஆதரவு காட்டி பல சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் அங்கே சென்று அவர்களுக்கு காணிகள் கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிட வேண்டாம் என அவர்கள் உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள். அவர்களது ஓயாத தியாகம் மதிக்கப்பட வேண்டும் என்பது உண்மையே! இது போல எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் குழுக்களும் அங்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அங்கு சென்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம் - 03.08.2017





08.03.2017 அன்று வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வெகு விமரிசையாகவும் மிகச் சிறப்பாகவும் டான் ரீவி அனுசரணையுடன் " பெண்கள் வலுவுள்ளவர்களாக மாறுங்கள்" என்ற தொனிப்பொருளில் இந் நிகழ்வு பாண்ட வாத்திய இசையுடனான பேரணியுடன் இடம்பெற்றது. டான் ரீவியின் ஊடகவியலாளர் மாலினி அவர்கள் இந்நிகழ்வில் தொகுப்பாளராக செயற்பட்டு நிகழ்வைச் சிறப்பித்தார். இன் நிகழ்வில் 650 க்கு மேற்பட்ட பெண்கள் ஆண்கள் உட்பட நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களில் இருந்தும் புதுக்குடியிருப்பு, மாங்குளம், ஆனைக்கோட்டை என்ற இடங்களிலும் நெடுந்தீவு, காரைநகர், வேலணை, ஊர்காவற்துறை போன்ற நான்கு தீவக பிரதேச செயலகங்களில் இருந்தும் பலர் அழைப்பினை ஏற்றுக்கொண்டு கலந்து இவ்விழாவை சிறப்பித்தனர்.

நான்கு தீவக பிரதேச செயலகங்களில் இருந்தும் சுயமுயற்சியால் பொருளாதாரத்தில் முன்னேறிய ஒவ்வொரு பெண்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மற்றும் பிரதேசங்களில் சமூக செயற்பாட்டில் தம்மை தலைவர்களாக இனம் காட்டிய தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பெண்கள் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவிகள் விவாத அரங்கு வெகு விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடைபெற்றது.

அதாவது "பெண்கள் முன்னேறுவதற்கு தடைக்கற்களா? அல்லது படிக்கற்களா?" முக்கியம் பெறுகின்றது என்ற தொனிப்பொருளில் மாணவிகளின் கலகலப்பான விவாதம் மிகச் சிறப்பாக அமைந்திருந்நது. இங்கு "போதை" என்ற நாடகம் ஒன்றும் ஐயனார் கலை பண்பாட்டுக்கழகத்தால் இன்றைய காலநிலவரத்தை மையமாக கொண்டு அரங்கேற்றப்பட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வேலணை பிரதேச மக்கள் மற்றும் வேலணை பிரதேசத்தில் பணிபுரியும் சேவையாளர்கள், வேலணை மத்திய மகாவித்தியால அதிபர், ஆசிரியர் கள் மற்றும் மாணவிகள், வேலணை பிரதேசத்தில் பணிபுரியும் வைத்திய அதிகாரிகள், கஜமுகன் காட்வெயார் நிறுவனத்தின் அங்கத்துவர்கள் மற்றும் பல இன்முகத்துடன் உதவிய பல அங்கத்தவர்கள் என பல்வேறுபட்டோரும் பல வழிகளில் எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினத்தை என்றுமே சொல் லில் அடக்க முடியாதளவில் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு உதவியிருந்தனர்.

இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு அனுசரணையாளராக டான் ரீவி குழுமத்தினருடன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.சி.குகநாதன் அவர்கள் ஆதரவு தெரிவித்தமைக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட பெண்கள்



## பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வலையமைப்பு



மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரங்கள், அவர்கள் தொடர்பான தரவுகள் சேகரித்து பெண்கள் குழுக்களை உருவாகியுள்ளது. பெண்களுக்கு பயிற்சி கொடுத்து, அவர்களை வலுவூட்டி சமூகத்தில் முக்கிய பங்குதாரர்களாக மாற்றுவதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் வாழ்வாதார வசதிகளை இழந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகளுடன் சுய தொழில் பயிற்சிகளையும் வழங்கிவருகின்றது.

இச்செயற்பாடுகளை தொடர்ச்சியாக வழங்கி வருவதோடு, பெண்கள் குழுக்களை அணிதிரட்டி ஓர் வலையமைப்புச் செயற்பாடும் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடானது, பெண்கள் குழுக்களை பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக் கூடிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதார உதவிகளின் மூலம் பெண்தலைமைத்துவ குடும்பங்களை வலுப்படுத்தல்


கிராமிய மட்டத்திலும் பெண்தலைமைத்துவ குடும்பங்களை ஒன்றிணைத்து தமது அபிவிருத்தி பணிகளில் சுயமாக பயணிக்கக்கூடிய வழிவகைகட்கு வழிகாட்டி யாக எமது அமைப்பு செயற்படுகின்றது.

பெண்தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் நோக்கும் வாழ்விட பிரச்சனைகள் சொந்த நிலத்தை மீளப்பெற்றுக் கொள்ளல், வாழ்வாதார பிரச்சனைகள், மீள் குடி யேற்றம் போன்ற பல விடயங்களில் சட்ட ரீதீயாக ஆலோசனை வழங்கி கட்டம் கட்ட மாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதோடு அவர்கள் இழந்துவிட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் மகளிர் அபிவிருத்தி நிலையம் உதவிகளை அளித்து வருகின்றது.


அத்துடன் மட்டுமின்றி வாழ்வாதார உதவிகளை, பெண்தலைமைத்துவ குடும் பங்கள் தாம் சொந்த இடத்துக்கு திரும்பும் வரை அவர்கட்கு வருமானத்தை தேடித் தரும் சுயதொழில்கட்கு மாதாமாதம் பதினைந்து பெண்தலைமைத்துவ குடும்பங்கட்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது.

***இவ்வகையில் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வாழ்வாதார கொடுப்பனவுகள்***

| | | |
|---|---|---|
| வேலணை | - | 25 குடும்பங்கள் |
| யாழ்ப்பாணம் | - | 20 குடும்பங்கள் |
| கோப்பாய் | - | 15 குடும்பங்கள் |
| நல்லூர் | - | 17 குடும்பங்கள் |
| சரசாலை | - | 21 குடும்பங்கள் |
| மட்டுவில் | - | 23 குடும்பங்கள் |




யாழ்ப்பாணம்



மணங்கும்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை



அல்லைப்பிட்டி

09.08.2017 அன்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்து 15 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தங்களால் செய்யக்கூடிய தொழிலை மேலும் மேம்படுத்தி வைப்பதற்காக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாட்டின் மூலம் பல பெண் முயற்சியாளர்களை உருவாக்குவது எமது நோக்கமாகும்.

## கோப்பாய் பிரதேச செயலகத்தில் 15 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசாலை கிராமத்தில் கோழி வளர்ப்பிற்கான கோழி, கூடு, கோழி தீன் போன்றனவை 20 பயனாளிகளுக்கு 09.08.2017 அன்று வழங்கப்பட்டது.





நல்லூர் பிரதேச செயலகத்தில் 21.06.2017 அன்று வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் கிராமத்தில் 25.09.2017 அன்று 23 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது







பயனாளிகளுக்கு
கோழி வழங்கப்பட்டது



பயனாளிக்கு தேங்காய்
எண்ணை ஊற்றுவதற்கு
தேங்காய்கள்
வாங்கிக்கொடுக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கெதிரான வன்முறைக்கு எதிரான ஆர்பாட்டமும், மகஜர் கையளிப்பும்:

பால்நிலை சார் வன்முறைகள் தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலையம் ஐ.நா குழுமத்தின் கூட்டு அலுவலகத்தின் வலையமைப்பிலும் யாழ்ப்பாண அரச அதிபர் தலைமையில் இயங்கும் பால்நிலை வன்முறைக்கெதிரான வலையமைப்பு சங்கம் வகிக்கும் பல ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வன்முறைகளை ஒழிப்ப தற்கும் ஒத்துழைக்க முன்வந்துள்ளது.

## வவுனியாவில் இளம் பெண்ணிற்காக ஆதரவுக்கான போராட்டம்

வவுனியாவில் இளம் பெண் ஒருவர் கூட்டு வன்முறைக்கு உள்ளான சம்ப வத்தை எதிர்த்தும், இந்நிகழ்வைக் கண்டித்தும் இவ்வாறான இழிவான சம்பவங்கள் மேலும் மேலும் இடம்பெறாது இருப்பதை வலியுறுத்தி மகளிர் அபிவிருத்தி நிலை யத்தால் ஆர்ப்பாட்டம் ஒன்று 28.11.2017 நடத்தப்பட்டது. அன்று வவுனியா, புதுக் குடியிருப்பு, யாழ்ப்பாணம், சார் மகளிர் அமைப்புக்கள் கலந்து கொண்டனர். அத்துடன் மகஜர் ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.



மகஜர் அரச அதிபரிடம் கையளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைகள்

மகளிர் அபிவிருத்தி நிலையம் "நங்கை" என்ற சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. இதன் மூலம் பெண்கள் தொடர்பான பல பிரச்சனைகள் முன்னேற்ற நடவடிக்கைகள் அரசியல் செயற்பாடுகள் கட்டுரைகளாக பிரசுரிக்கப்படும் போது அவற்றை பலர் வாசித்து தெளிவு பெற இச்சஞ்சிகை உதவுகின்றது.

---

**மக்களுக்கான சட்டம், ஒழுங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு**

**இலவச சட்ட சேவை**

**மகளிர் அபிவிருத்தி நிலையம்**

மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண் களுக்கென இலவச சட்ட சேவை பிரிவு ஒன்றினை நடாத்தி வருகின்றது. இச்சேவை கீழ்க்காணும் முகவரியில் நடைபெறுகின்றது.

**மகளிர் அபிவிருத்தி நிலையம்**

**07, இரத்தினம் ஒழுங்கை,**

**கே.கே.எஸ் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

தங்களின் முறைப்பாடுகளை திங்கள் - வெள்ளி வரை காலை 9மணி முதல் மாலை 4.30 வரை அலுவலகத்தில் உள்ள இலவச சட்ட உதவியாளரிடம் சமர்ப்பிக்கவும்.

அவசர முறைப்பாடுகள்இ தேவைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**[ 021 222 4398 , 077-115-0323 ]**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகளிர் அரசியல்



கருவைச் சுமந்து உருவைத் தரும் அன்னையே பூமிவாழ் மனித குலத்தின் முதல் கன்கண்ட தெய்வம்.

அன்பு, அரவணைப்பு, ஆதரவு, ஆறுதலளிப்பது, இரக்கம், இன்முகம், ஈகை இவைக்கு ஈடில்லாத் தெய்வம் அன்னையே அத்தகைய பெண்குலத்தின் பெருமைக்குரிய பிறப்பெடுத்தும் பெண்களின் அரசியல் ஈடுபாடு உலகளாவிய ரீதியிலும் சரி நம் நாட்டைப் பொறுத்த மட்டிலும் போதாமையே வெளிப்படை.

ஆதிகாலத்தில் பெண்களிற்கு கல்வி மறுக்கப்பட்டு அடுப்பம் கரையில் ஒதுக்கப்பட்டனர். நாகரீக உலகில், விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக்காலகட்டத்தில் கூட பெண்கள் அரசியலில் ஈடுபட தயங்குகின்றார்கள். அல்லது ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

சாதனைப் பெண்களாக பல அரிய செயல்களில் சாதித்துக் காட்டிவரும் மகளிர் அரசியலில் தம் பங்களிப்பை போதுமான அளவில் ஈடுபடுத்திக் கொள்ளாமை குறைபாடானதே.

நாகரிகம் வளர்ச்சியடைய முன்னர் பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பே எம் தமிழ் மூதாட்டி ஔையார் பெரும் அறிஞராக தமிழ்த்தொண்டு புரிந்து பல அரச சவையில் புகுந்து அறிவியல் தத்துவங்களை ஒப்புவித்து இன்றளவும் ஏன் உலகம் உள்ள வரை ஔவையின் பெரும் புகழ் பேசப்படும் இது வரலாறு.

எனவே, மனமுண்டானால் இடமுண்டு. பெண்கள் அரசியலில் ஈடுபடாமைக்கு ஆண்ஆதிக்கமும் காரணமாகின்றது. ஆரோக்கியமான அரசியல் நகர்வு இல்லாமை, வன்முறை அரசியல் பணப்பலம் பொருந்திய செல்வாக்கு அதிகார பீடத்தின் அகந்தை என்பன பொதுவாக அமைதியாய் வாழவிரும்புவோரை அரசியலில் ஈடுபடவிடாது. இதற்கு பெண்களும் விதி விலக்கல்ல.

மக்கள் தொகையில் பெண்களே அதிகம். ஏன் இன்று இலங்கையில் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களில் பெண்களே அதிகமாக ஜெயிக்கிறார்கள். பொறுப்பான அரச நிர்வாகத்தில் இருந்து அசத்துகின்றார்கள் வீரதீர செயல்களில் ஈடுபட்டும் சாதிக்கின்றார்கள். பொறுப்பான குடும்பத் தலைவியாக தன் குடும்பத்தை நிர்வாகம் செய்து வளம் சேர்க்கிறார்.

போரினால் எம் நாடு கடந்த சில வருடங்களிற்கு முன்னர் சுமார் முப்பது ஆண்டு காலம் பல குடும்பத் தலைவர்களை இழந்துள்ளது. கணவன் இழந்த நிலையில் தன் ஒரே மகனையும் இழந்த குடும்பங்கள் பல ஆயிரம் இன்னிலையில் தன் ஏனைய பெண்பிள்ளைகளுடன் நால்வர், ஐவரென தம் குடும்பச்சுமைகளைத் தாங்கி உழைத்து வாழ வழிவகுக்கும் குடும்பத் தலைவிகளைக் கொண்ட இனம் எம் இனம். ஏன் கணவன் குடும்பத்தில் குடிபழக்கத்தால் வருமானத்தைத் தொலைத்து, வீட்டுடைமைகளையும் விற்றுத் தீர்க்கும் நிலையில் உள்ள குடும்பங்களிலும் பெண்கள் துஞ்சாமை கொண்டு தன் குடும்பத்திற்கு வாழ்வழிக்கின்றனர். இப்படி பெண்களின் புகழைப் போற்ற முடியும்.

அரசியலில் மட்டும் போதுமானளவில் அதாவது அவர்களின் பிறப்பு வீதத்திற்கு ஏற்ற அளவில் அரசியலில் ஈடுபடவில்லை. இதற்குப் பிரதானகாரணம் பெண்கள் தங்கள் குடும்பக் கடமைகளைத் தான் பிரதானமாகக் கருதுகின்றனர்.

பரந்த உலக நாடுகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாடுகளில் மட்டுமே பெண்கள் தலைமையேற்று ஆட்சிசெய்கின்றனர்.

ஜனநாயக அரசியலில் முதல் பெண் பிரதமராகவும் முதல் பெண் ஜனாதிபதியாகவும் திகழ்ந்தவர்கள் அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாகக்காவும் அவரது மகள் சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்காவும் ஆவார்கள்.

முஸ்லிம் நாடுகளில் கல்வி முதலான சுதந்திரங்கள் மறுக்கப்பட்டாலும் சில நாடுகளில் அரச தலைவர்களாகவும், எதிர்கட்சி தலைவர்களாகவும் மாறி மாறி தொடர்ந்தும் ஆட்சியிலே உள்ளனர்.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் உலகம் அறிந்த பாரதப் பிரதமராக, அன்னை இந்திராஜி திகழ்ந்தார். அண்மையில் காலமான தமிழ் நாட்டின் முன்னால் முதல்வர் செல்வி. ஜெயலலிதா அம்மா அவர்களும் கால் நூற்றாண்டுக்கு மேலாக அரசியலில் பிரகாசித்து ஆட்சி செய்தார்கள். இன்னும் சில மானிலங்களில், உத்தர பிரதேசம், மேற்கு வங்காளம், புதுடெல்லி போன்ற மாநிலங்களில் முதல்வராகவும் ஏன் இந்திய நாட்டின் இன்றைய பாதுகாப்பு அமைச்சரும் ஒரு பெண்ணே! அதுவும் ஒரு தமிழ்ப்பெண்ணே! நிர்மலா சீதா ராமன்.

எனவே, அரசியல் என்பது பெண்களிற்கு முடியாத விடயமல்ல. சொல்லப் போனால் மிகவும் சாதித்தக்காட்டவே போராட வேண்டியுள்ளது. இன் நிலையில் பெண்கள் தயக்கமின்றி அரசியலில் ஈடுபாடு காட்ட வேண்டும். அதற்கு குடும்பத்தவர்கள் வழிவிட்டுக் கொடுக்க வேண்டும். அண்மையில் இலங்கை அரசால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்பட்டு நடமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் அமைப்பு பின் பிரகாரம் பெண்களிற்கான அரசியல் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது வரவேற்கத்தக்கதே.

ஆனாலும் பெண்களை அரசியலில் ஈடுபடுத்தி தேடிப்பிக்க வேண்டியுள்ளது. இன்னிலை மாறி பெண்களின் அரசியல் வாய்ப்பு கட்டாயமாக்கப்பட்ட நிலை மாறி இயல்பாகவே பெண்கள் சரிநிகராக அரசியலில் உகந்த ஈடுபாடு காட்டவேண்டும். அந்த வழிமுறைகளைக் கடைப்பிடிக்க சில தன்னார்வ நிறுவனங்கள் பெண்களிற்கேற்ற பயிற்சிப் பட்டறைகளை வழங்கி வருகிறது. மேன்மேலும், இதனை வளப்படுத்தி தொடர்ந்தும் இப்படியான அரசியல் ஈடுபாட்டிற்கான பயிற்சி நெறிகள் வைக்க வேண்டும்.

மேலும், பெண்களின் அரசியல் ஈடுபாடுகளிற்காக தடைகளைக் கண்டறிந்து தடைகளதை நீக்க வளிசமைத்தல் வேண்டும். பெண்கள் அரசியலில் ஈடுபட தகுந்த பாதுகாப்பும் வழங்க வேண்டும். அவர்கள் சமூகத்தாலும் மனித நேய அமைப்புக்க ளாலும் அரசியல் பாகுபாடுகள் இன்றி உரிய காலங்களில் கௌரவிக்கப்பட வேண்டும். இதனால் பெண்கள் மத்தியில் நம்பிக்கையும் தன்னார்வமும் மேலோங்கும்.

பெண்கள் தங்களிடமுள்ள ஆளுமைத்திறன் விருத்தியை அரங்கேற்றி அழகு பார்க்கும் தளமாக அரசியலையும் பின்பற்றியாக வேண்டும். இதனால் நாட்டிற்கும் வீட்டிற்கும் ஏன் பெண் சமூகத்திற்கும் பெரு நன்மைகள் கிட்டும் குறிப்பாக பெண்களிற்கு எதிரான வன்முறைகள், குடும்ப வன்முறைகள் இழிவுபடுத்தும் செயல் என்பனவற்றால் பெண்கள் தாமாகவே பலம் கொண்டவர்களாக திகழ்வார்கள். தமிழர் சரித்திரத்தில் பலவரப் பெண்பணிகள் ஆட்சி அதிகாரம் செய்தனர். ஆன்மீகம் இலக்கியம் அறிவியல் எனப்பலதுறை விற்பனர்களாக திகழ்ந்து இன்றைய நாடும் ஏடும் போற்றி வண்மையாகவேயுள்ளனர். ஆனாலும் தொடர்வதும் குறைவு சராசரியும் இல்லை. ஈழப்போர் காலத்தில் எம் இளம் பெண்களின் வீரதீர போர்க்கள ஈடுபாடுகள் பிரமிக்க வைத்ததே!

**அரசியல்துறையில் பல பொறுப்பக்களைச் சுமந்து நிர்வாகம் செய்தனரே!**
**எனவே, தாரகைகளே!**
**தரணியை ஆளவாரீர்!**
**பெண் குலத்தின் பெருமையை உலகம் போற்றச்செய்யுங்கள்.**
**வாழ்க பெண்மை! வளர்க இவ்வையகம்!**

**சங்கரன் தங்கராசா**
**சமூக சேவையாளர்,**
**நவபுரம், கைதடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததில் பிடித்தது
பிரசித்திபெற்ற அரபுக் கவிஞரால் எழுதப்பட்டது

# எனக்கு சக்தி இல்லை உன்னை மீற!

உன்னை மாற்ற எனக்கு சக்தியில்லை
உனது வழிகளை விளக்கவும் எனக்கு சக்தியில்லை
ஒரு ஆண் ஒரு பெண்ணை மாற்ற முடியும்
என்பதை ஒரு போதும் நம்பாதே!
அந்த ஆண்கள் பாசாங்குக்காரர்கள்
பெண்ணைத் தங்கள் விலா எலும்பில் இருந்து
உருவாக்கியதாக அவர்கள் நினைக்கிறார்கள்
ஒரு ஆணின் விலா எலும்பில் இருந்து
பெண் எழவில்லை!



ஒரு போதும் இல்லை!
அவன் தான் அவளுடைய கருப்பையில்
இருந்து எழுகின்றான்!
நீரின் ஆழத்திலிருந்து ஒரு மீன்
மேலெழுந்து வருவது போல
ஒரு நதியிலிருந்து ஒரு கிளை பிரிவது போல
அவன்தான் அவளுடைய விழிகள்
என்னும் சூரியனை வலம் வருகிறான்
ஓரிடத்தில் நிலைத்திருப்பதாக!

அவன் கற்பனை பண்ணுகின்றான்
உன்னை அடக்கி வைக்கவோ
அல்லது வீட்டில் முடக்கி வைக்கவோ
அல்லது உன் முதல் இயல்புகளை மட்டுப்படுத்தவோ
எனக்கு சக்தியில்லை!
இது முடியாத காரியம்
என் மதிநுட்பத்தை உன்மீது
சோதித்துப் பார்த்திருக்கின்றேன்.
என் ஊமைத்தனத்தால் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் உன்னில் வேலைசெய்யவில்லை
வழிகாட்டலும் இல்லை!
ஆர்வத்தூண்டலும் இல்லை!
நீ எப்படி இருக்கின்றாயோ! நீ அப்படியே இரு!
உன் பழக்கவழக்கங்களை நொறுக்க
எனக்கு சக்தியில்லை!
முப்பது ஆண்டுகளாக நீ அப்படியே இருக்கின்றாய்!
முன்னூறு ஆண்டகளாக
ஒரு போத்தலில் அகப்பட்ட ஒரு புயல் இயல்பிலேயே!

ஒரு ஆணின் மணத்தை உணரும்
ஒரு உடல் இயல்பிலேயே !
அதை காக்கின்ற இயல்பிலேயே!
அதை வெற்றிகொள்கின்ற உடல்
ஒரு ஆண் தன்னைப் பற்றி என்ன
சொல்கின்றான் என்பதனை ஒருபோதும்
நம்பாதே!
தான் தான் கவிதைகளைப் படைப்பதாக
தான் தான் குழந்தைகளை உருவாக்குவதாக

அவன் சொல்வதை ஒரு போதும் நம்பாதே!
பெண் தான் கவிதைகளை எழுதுகின்றாள்
ஆண் அதன் கீழ் தன் பெயரை
எழுதிக்கொள்கின்றான்,
பெண் தான் குழந்தைகளை தாங்குகின்றாள்
ஆண் மருத்துவமனையில்
தான் தான் தந்தை என்று ஒப்பமிடுகின்றான்
உன் இயல்பை மாற்ற எனக்கு சக்தி இல்லை!
என் புத்தகங்கள் உனக்குப் பயனற்றவை!
எனது வாக்கு மூலங்கள்!
உன்னை நம்பவைப்பதில்லை!
அப்பா மாதிரியான என் ஆலோசனைகளால்
உனக்கு எவ்வித நன்மையுமில்லை!

நீ அராஜகத்தின் அரசி
பைத்தியத்தின் அரசி
நீ யாருக்கும் உரியவள் அல்ல
நீ அப்படியே இரு!
நீ இருளில் வளரும் பெண்மை மரம்!
உனக்குச் சூரிய ஒளியோ தண்ணீரோ
தேவையில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆண்களையும் நேசித்த
ஆனால், யாரையும் நேசிக்காத கடல் இளவரசி நீ !
எல்லா ஆண்களுடனும் படுத்துறங்கிய
ஆனால், ஒருவரோடும் படுத்துறங்காதவள் நீ !
எல்லா இனக்குழுக்களுடனும் சென்று
கன்னியாகத் திரும்பிய
பத்தோயின் பெண் நீ தான் !
நீ அப்படியே இரு !



**ஆங்கில மொழிபெயர்ப்பு**
**எம்.ஏ.நுஃமான்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்தி

வாழ்வது கடினம் அதிலும்
வதந்தியின் ஆக்ரோஷசம்
சொல்லாதவை எல்லாம் முயல் வேகத்தில்
பரப்பிவிடும் - வேலையற்ற அலிகள்!

இதனால் பயனில்லை !
உங்கள் வாழ்க்கையை உற்று நோக்குங்கள்!
வாழ்க்கை ஒரு - நீர்க்குமிழி
வாழத் தெரியவில்லை யாயின்
இறந்திடுங்கள்!

உங்கள் பாதையை உருவாக்க தெரியாத நீ
ஏன் மற்றவர் பாதையில் பயணிக்கின்றீர்
வதந்தியை பரப்புவது இலகு
ஆனால், உன் வாழ்க்கைப் பாதையில் - நீ
விதைத்த முட்களை எடுப்பது
கடினம் !!!!

இதனால் உன் பரம்பரையின் அழிவு !

மற்றவர்களுக்கு உதவ முடியவில்லையாயின்
உபத்திரவம் செய்வதை விட செத்து மடிவது மேல் !
புதுவழி பிறக்கட்டும் ! புமி மலர !

**மதுக்ஷன் – யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களின் ஆயுளைக் குறைக்கும் உணவுப்பழக்க வழக்கங்களும், மருந்துப்பாவனைகளும்

மானிடர்களே!



உழைப்பின் அளவை விட ஊண் உண்பதை நீங்கள் கவனத்தில் கொள்கின்றீர்கள். இதனால் உங்கள் உடல் குறைபாடுகள் பல பல விதத்தில் பல பல அடையாளமற்ற நோய் களும், பாதகங்களும் உங்களை பலவீனப் படுத்துகின்றது என்பது உங்களுக்கு புரிய வில்லை.

கடவுள் மனிதனை படைத் தான் ஆனால், அவனை பலமாகவே படைத்தான் மனிதர்களே!

உழைத்து உண்ணும் உணவை நீங்கள் இன்று உழைக்காமல் உண்பதாலே உங்களை அடக்கியாள நோய்களை விதம் விதமான தராதரத்தில் கடவுளும் படைக்கின்றான்.

"பசிவந்தால் பத்தும் பறந்துவிடும்" என்பது அன்றைய முன்னோரின் பழமொழி. பசிக்கும் போதே உணவை உண்டால் உடலின் நிறை அதிகரிக்காது. இரைப்பையின் அளவு பெரிதுபடாது. நோய்களின் சக்தி எம்மை மீறாது. வீண்சோம்பல் எம்மை யாலாது. வீரத்தன்மை குறையாது. எதுவும் செய்வோம் என்ற ஆற்றல் எம்மை வாழ வைக்கும். ஏன் இந்த நிலை என்பது புரியாத புதிராகவே காணப்படுகின்றது.



ஆனால், இன்று இதையெல் லாம் மீறி உணவை உண்பதே எமது தொழிலாக கொண்டு வாழ்வது மட்டு மின்றி மருந்துகளையும் நாம் இன்று உணவாகவும், நீர் ஆகாரமாகவும், ஊசி மருந்துகளாகவும், உடலில் உட்செலுத் துகின்றோம். அதுமட்டுமின்றி மருந்துப் பாவனைக்காக எமது பணங்கள் வீண் விரையமாகின்றது.


வீணான நேர முகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு விதமாக மாற்றமடைகின்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நோய்கள் புதிது புதிதாக அறிமுகமாகின்றன. அதனால் பணத்தை மட்டுமின்றி எமது உடல், உள நலங்களை நாம் வீண் விரையமாக்கி வருகின்றோம் என்பதை சற்றேனும் புரிந்து கொள்ளுங்கள் மானிடரே !


"பழையன கழிவதும் புதியன புகுதலும்" எமது தேவைதான் ஆனால் பழைமையானவர்களின் இயற்கையான உணவுப் பயன்பாடுகளும், குடிபானங்களும் மருத்துவமற்ற மனித வாழ்க்கையும் உடலை பலமாகவும், திடமாகவும், சுறுசுறுப்பாகவும் செயற்பட வைத்தது.



ஆனால், புதியன புகுதலாலே இன்று பல சோம்பேறிகளும், சுறு சுறுப்பற்றவர்களும், முட்டாள்களும், செயற்கையின் உணவை உண்டு மகிழ்வதாக எண்ணி உண்மைகளை 'தெரிந்து கொள்ளாமல் பொய்யை உரைப்பது போன்றே, உழைப் பின்றி புதிதான செயற்கை உணவுகளை உண்டு தங்களையே தாங்கள் அழித்துக் கொண்டு போவது அவர்களுக்கு புரிவதில்லை.

## மானிடரே !

பிறந்திடும் குழந்தைகளில் இருந்து வாழ்க்கையை முடித்து ஒப்பமிட காத்திருக்கும் முதியவர்களில் இருந்து அனைவருக்குமே இன்று ஏதோ ஓர் நோய்கள் மட்டு மின்றி பல நோய்கள் அவர்களுக்கு உடல், உளரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதில் சிலர் முன்னோர்களின் பரம்பரை நோயென புலம்பிக் கொண்டிருக் கின்றனர்.



தற்காலத்தில் அதிகரித்தவரும், வைத்தியசாலைகளும், உணவகங்களும், மக்களின் வாழ்க்கையை இலகுபடுத்துவதற் காகவல்ல அவற்றினாலே மனிதர்களை மீண்டும் பாரிய நோய்களின் எதிர்ப்பு சக்தி யற்றவர்களாக மாற்றி வருகின்றது.

மருந்துப் பாவனைகள் மீண்டும் மனிதர்களை பலவீனப்படுத்துவதாக மட்டு மின்றி அவற்றை உட்கொள்வதால் மட்டுமே மனிதர்கள் நடமாட முடியும் என்ற சூழ் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர்.

வைத்தியர்களாலும் கண்டுபிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதளவிலான நோய்கள் பரம்பலடைந்து வருகின்றன. உணவகங்கள், விடுதிகளில் பல தவறான உணவு மற்றும் குடிபானங்கள், போதை பாவனைகள், போதையை ஏற்படுத்தும் பல வகையான திண்மவகைகளின் பாவனைகளின் செயழிந்த தன்மைமையும் ரூசிக்காக இரசாயன பதார்த்தங்களின் சேர்மானங்களுமே இதற்கான முக்கிய காரணமாகும்.

மற்றும் வைத்தியர்களால் வழங்கப்படும் மருந்து வகைகளும் பாவனையா ளர்களுக்கு எதற்காக? ஏன்? பயன்படுத்துகின்றனர் என புரியவைப்பதில்லை. மற்றும் ஒரு நோயாளியின் தாக்க சக்திக்கு இயலாதளவில் மருந்துகள் வழங்கப்படுவதும் ஒரு முக்கிய காரணமாகும். அது சில வருடங்களில் நோயாளர்களால் சாதாரண நிலையில் இருந்து அசாதாரண நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றனர்.

தொடர்ந்தும், இதனால் மனிதர்களின் உண்மையான ஆயுட்காலத்தை விட முன்னரான இறப்பை எதிர்கொண்டுவருகின்றனர் என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

எம்மால் முடிந்த உடல் உழைப்பை செய்து !
உணவைச் சுருக்கி!
நோயின்றி வாழ வாழி தேடுங்கள்.
ஆயுள் என்பது நீர்க்குமிழியே !
அதில் வாழ்வது சில நொடிப்பொழுதாயினும் நோய்யின்றி வாழ்வதே சிறப்பு !

**வினோத் – மொறட்டுவ பல்கலைக்கழகம்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமையும் பெருமூச்சும்



சமுதாயம் என்பது அதில் வாழும் மக்களையே பிரதிபலிக்கின்றது. ஆண், பெண் இவர்களில் சிறுவர், நடுத்தர வர்க்கத்தினர், முதியவர் என்ற அடிப்படையில் உள்ளனர். குறிப்பாக தாய், தந்தை, பிள்ளைகள்.

பெண் என்றால் மென்மையானவள், இவளை பெருமைக்குரியவளாக போற்று கின்றனர். முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அதே பெண் இனம் பெருமூச்சோடு வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக கணவனை இழந்த மனைவி, சீதனக் கொடுமையால் தவிக்கும் யுவதி, கற்பழிக்கப்பட்ட சிறுமி, யுத்தத்தில் அவலச்சாவில் மகனை இழந்த தாய்.

பெண் இனம் முன்னைய காலகட்டத்தில் பெருமையுடன் வாழ்ந்து வந்தன. அரச பரம்பரை முதல் சாதாரண மக்கள் வரை அவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். அரசியாகவும், ஜனாதிபதியாகவும், குடும்பத் தலைவியாகவும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்றாள். ஆனால்,

இன்று பெண்கள் எமக்கு சுதந்திரம் வேண்டும் என போராடுகின்றார்கள். ஏன் சமுதாயத்தில் முழுமையாக வாழ முடியாமையால் முழுமையாக வாழந்தால் பெண் தனக்குள்ளே பெருமிதம் கொள்ளும் மனநிலை உருவாக்கப்படும். அதிலே அவள் மகிழ்ச்சியடைகின்றாள்.

ஒரு பெண் தன் இலக்கை நோக்கி உதாரணமாக ஒரு மாணவி தன் கல்வியில் ஆர்வம் காட்டும்போது அதற்கு இடையூறுகளை ஏற்படுத்தி (கற்பழித்தல், கொலை) அவளின் பெருமையை நடுமரத்தை தறித்து சாய்த்தது போல் வெட்டி சாய்த்து விடுகின்றனர் சில ஆண்கள். அந்த சாய்ந்த மரத்தில் சில துளிர்கள் உருவாகி பெருமூச்சோடு வாழ்கின்றனர். சில அடி மரம் பட்டு இறந்து போய்விடுகின்றன. இந்த செயலை பார்க்கும் தாய் அவளும் பெண்தானே பெருமூச்சோடு வாழ்கின்றாள்.

இதுதான் என் வாழ்க்கையா? என ஏங்கும் பெண்கள் அதிகளவு காணப்படுகின்றனர். தன்னுடைய பிரச்சினைகள் தேவைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூற முடியாத நிலையில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடல், உளரீதியான பாதிப்புக்களிற்கு முகம் கொடுத்து வருகின்றனர். சிறுவர் தினம், அன்னையர் தினம், மகளிர் தினம் இவைகள் எல்லாம் ஒரு கொண்டாட்ட நிகழ்வாக காணப்படுகின்றது. இதனை முக்கியப்படுத்துகின்றோம். பெருமைப்படுத்துகின்றோம் என்பது வெறும் போலி வேசம்.

இன்றைய காலகட்டத்தில் எத்தனை அன்னையர்கள் தங்கள் மகன், மகளை இழந்து கண்ணீரோடு நொந்து உதவியில்லாமல் அன்பு இல்லாமல் வீடுகளிலும் முதியோர் இல்லங்களிலும் வைத்தியசாலைகளிலும் வேதனையும், பெருமூச்சோடும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். தன் மகளை, தடுப்பு முகாம்களில் பார்த்த தாய் இப்போது இறந்துவிட்டார் என்ற செய்தியை கேட்டு பெருமூச்சோடு வாழ்கின்றாள். சில தாய் தன் மகன் தடுப்பு முகாம்களில் இருந்து எப்போ வருவான் என்று ஏங்கிக்கொண்டு இருக்கின்றாள். இதுதான் அன்னையர் தினமா? ஆறுதல் கொடுக்கும் தினமா?

அன்னை தன் மகனை பத்து மாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி எத்தனை எண்ணங்களோடு வளர்த்த தாய் தன்னை பாதுகாப்பான் தன் மகன் என்று இருந்த தாய் என் தலைவிதியோ நான் மற்றவர்களிடம் கையேந்தி என்ற பெருமூச்சோடு வாழ்கின்றாள் அவளும் அன்னைதானே. ஏன் அவளுக்கு அன்னையர் தினம் ஆறுதல் கொடுக்கின்றதா? தன் ஆண் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகள் வேறு ஒரு ஆண் பிள்ளை செய்கின்றதை பார்த்து கண்ணீர் விடுகின்றாள், வேதனைப்படுகின்றாள்.

வாழ்க்கையில் ஆயிரம் உறவுகள் வரலாம் போகலாம் ஆனால் ஒரு பெற்ற தாய்க்கு என் மகனை, மகளைப் போல் வரமுடியாது.

பெண் இனம் ஒரு வலைப்பின்னலைப் போல் தாய், பிள்ளை என பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

பெண், சிறுமி, யுவதி, தாய் இந்த மூன்று கால கட்டத்தில் இருக்கின்ற பெண்கள் முகங்கொடுக்கின்றது சிறுமிக்கு கற்பழிப்பு, கொலை, தற்கொலை என இடம்பெற்று வருகின்றன.

பெண்ணுக்கு பெண்ணே பெருமை சேர்ப்பது போல் பெண்ணுக்கு சுதந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டும் என சில சமூக பற்றாளர்கள் போராடுகின்றனர் (பெண்கள்) அமைப்புக்கள்.

உயிர் இழப்புக்கு எதையும் ஈடுசெய்ய முடியாது. உதவிகள் ஆறுதலை அளிக்கும் ஆனால் அது நிரந்தரமில்லை. உதவி செய்பவர்களும் தேவையற்ற உதவிகளை செய்துவிட்டு பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் விளம்பரங்களிலும் வெளியிடுகின்றனர்.

இந்த உதவிகளை பெறும் ஒவ்வொரு பெண்ணும் உள்ளம் மகிழ்வோடு பெறுவதில்லை. தன்னுடைய தேவைகள் கட்டாயம் எந்த வழியும் இல்லை இதைப் பெற்றுத்தான் உயிர்வாழ வேண்டுமென்று பெறுகின்றனர்.

இதற்காக நாங்கள் விதைவைகளிற்கு வாழ்வாதாரம் வழங்குகின்றோம். இன்றைய காலகட்டத்தில் கூடுதலாக குறைந்த வயது பெண்கள் விதைவைகளாக இருக்கின்றனர். போரில் கணவனை இழந்த பெண்கள் இப்படியான நிலைமையில் பெருமையை தேடுவாளா? பெருமூச்சு விட்டு மடிவாளா?

அவர்களிற்கு நல்ல பாதையை காட்டுங்கள் அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். பெண்ணே பெருஞ் செல்வம். செல்வத்தை தேடி பெண்ணை மிதிக்கும் மனிதர்கள் இல்லாமல் பெண்ணே செல்வம் பெண்ணுக்கு பெருமை சேர்ப்போம் வாரீர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப் போனவள்

அழகிய பூக்களாக ஏதோ தூரத்தில் தெரிகிறது. வித்தியா பேரூந்திலிருந்த வாறே பார்க்கிறாள் மறுகணம் அவள் பார்த்த பூக்கள் கொக்குகள் போலத் தெரிகிறது. பேரூந்து விரைந்து அந்த இடத்தை கடக்கும் போதுதான் உணருகின்றாள் பருத்திப் பஞ்சுகள் வெடித்திருக்கின்றது. தூரத்தில் தெரிந்த இயற்கை அழகு நெருங்க முன் ஏதோ சிந்திக்கவைத்தாலும் எதிர்கொள்ளும்போது நிஜம் தெரிகின்றது. வித்தியாவின் மனதில் வெடித்துப் பறக்கும் நினைவுகள் பின் தொடர்ந்து வந்து கொண்டும் இருந்தது அவள் மனதினூடாக.....

பேரூந்தில் மூன்று இருக்கைகள் நடுவில் வித்தியா. அக்கம் பக்கத்திலிருந்த வர்கள் ஸ்மாட் போனுடன் இணைப்பிலிருந்தார்கள். வலப்பக்கத்தில் இருப்பவள் காதுக்குள் செருகிய வண்ணம் பாடலைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். இடப் பக்கமிருப்பவள் முகப்புத்தகத்துக்குள் முகம் புதைத்திருக்கின்றாள்... காலை வெயில் மெல்ல எகிறத்தொடங்க இனி இயற்கையை சகிக்கமுடியாது நடுவில் இருப்பதால் சரிவதும் சிரமம் நிமிர்ந்திருந்தபடியே தனது நபரிடைத் தொடர்பாடலை வெளிப்படுத்த முடிவெடுக்கின்றாள். சறோஜா... காலத்தில் மூன்று பெண்கள் கூடியிருந்தால் அது குதுகலமாகவும் முஸ்பாத்தியாகவும் இருந்திருக்கும். கறுப்பு வெள்ளை காலம் போய் இப்போ கலர் கனவுகளும் இது சமந்தா காலம் அசமந்தமாகவே பயணம் தொடர்ந்தது. கையடக்கத் தொலைபேசிகளில் "சார்ச்" குறைந்து கொண்டு போகவே வித்தியாவைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினார்கள். அக்கம் பக்கமிருப்பவர்கள் புன்னகைப்பதில் வித்தியாவுக்கும் மகிழ்ச்சிதான்.....

உமது பெயர் வசந்தி, எங்கே போறீர்? வவுனியாவுக்கு. நீங்கள், அக்கா கொழும்புக்கு இன்ரவியூவுக்கு போறன். வசந்தி ஏன் டல்லா இருக்கிறமாதிரி இருக்குது. "இல்... இல்லையே" சிறிது மௌனம் எல்லாம் முடிஞ்சுதக்கா. "என்ன" தொலை பேசியை பார்த்தாள். என்ர வாழ்க்கையைச் சொன்னன்! வித்தியாவின் முகபாவம் வசந்தியை ஆறுதல்படுத்துவதாக இருந்தது. அருகிலிருக்கும் கவிதாவும் பாடல் கேட்பதை நிறுத்திவிட்டு இந்த உரையாடலை கவனித்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் ஆச்சரியம் மேலோங்கியிருந்தது. நான் "ஓடிப் போனவள்" அதுதான் இந்த வாட்டம் நீங்கள் எங்கட ஊரில கேட்டுப்பாருங்கோ எல்லோரும் என்னை நல்லபிள்ளை எண்டுதான் சொல்லுவினம் பாருங்கோ. நல்லாப் படிப்பன் எண்டும் பாராட்டுவினம் எண்டாப் பாருங்கோவன் "சரியம்மா ஏன் ஓடிப் போனனீர்" உயர்தரப்பரீட்சையில பாஸ் பண்ணின்னான். கலைப்பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறன். "ம்ம்" "தண்ணீரைத் தாங்கோ" இந்தாரும் "அது சரியம்மா ஏன் ஓடிப்போனனீர்" ஓடிப் போவமா என்று என்னை காதலிச்ச "வரன்" கேட்டார் நானும் சரி எண்டு ஓடிப்பாப்பம் எண்டுதான்....

பள்ளிக்கூடத்துக்கு போகும் போது "வரன்" என்பவன் பின்னால அடிக்கடி வருவான். அவனும் அவன்ர மூஞ்சியும் அவனை எனக்கு பிடிக்கவே பிடிக்காது. "அப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் ஓடிப்போனீர்” பின்னால வரும் அவனுக்கு நான் ஒருநாள் செருப்பால அடிச்சனான் ஆக்ரோசமா அவனை பல தடைவைகள் அவமானப்படுத்தியிருக்கிறன் காரணம் பின்னால வாறதும் காதலிக்கச் சொல்லிக் கேட்கிறதும் எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை. உறுதியாய்தான் இருந்தனான் அக்கா என்ர நண்பிகள்தான் அவன் பாவம் எண்டு சொல்லிச்சினம். உன்னை நிறைய அன்பு செய்கிறான் எண்டிச்சினம். இவனைப் போல ஒருத்தன் தேடினாலும் கிடைக்கமாட்டான் எண்டெல்லாம் நண்பிகள் சொன்னதால செருப்பால அடிச்ச நானே சிரிப்பால அணைக்கிற அளவுக்கு மனம் மாறிப்போனன். திடீரென்று ஒருநாள் ஓடிப்போவாமா என்று கேட்டான். நானும் உடன் பட்டன் பிறகுதான் எல்லாம் தெரிஞ்சது.... அந்தப் பெடியன் வரனுக்கு குடிப்பழக்க மிருந்தது அதுமட்டுமல்ல அவன் திருமணமானவன் என்பதும். வித்தியா வசந்தியின் முதுகை லேசாக வருடினாள் கண்ணீரை துடைப்பதில் இருவரும் முயன்றனர். இதுவரை எதுவும் பேசாமலிருந்த கவிதா கேட்டாள்

“அப்புறம் என்ன நடந்தது”

எங்கட வீட்டுக்காரர் எங்களை பிரிச்சிட்டாங்க, பொலீசில வரனை விசாரிச் சாங்க தண்டனையும் கொடுத்தாங்க அப்போதுதான் விசாரணையில தெரியவந்தது அவள் ஏற்கனவே திருமணமானவன் என்பது.

லூசா உமக்கு படிச்சதும் பயனில்லாமல் போச்சுது. யாழ்ப்பாணத்தில உள்ள பெண்கள் இப்ப ஆக்ரோசமா இருக்கிறியள். ஆனா முடிவில தெளிவற்று இருக்கிறியள். பெண்களுக்கு ஆணித்தனம் இருக்கவேணும். எனக்கும் இப்படித்தான் பாரும் ஒரு சம்பவம் இல்லை பல சம்பவம் நடந்திருக்கு. நானும் யாழ்ப்பாணம்தான் இப்ப கனடாவில சிற்றிசனாயிட்டன்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் தேருக்கு வந்தனான். எல்லாம் முடிஞ்சு கனடா போக கொழும்புக்குப் போறன்... கனடாவில ஒருத்தன் என்னிடம் “ஐ லவ் யூ” என்று சொன்னான். என்னையே திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் சொன்னான். அவனை எனக்குத் தெரியாது அறிமுகமில்லாதவன் ஆனாலும் கான்சம்தான்.

ரீ சாப்பிடுவம் வாங்க, அங்க போய் மனம் விட்டு பேசலாம் என்றேன். இருவரும் “ரெஸ்ரோரண்டில்” அமர்ந்திருந்து கதைத்தோம். பெயர் விக்னேஸ் என்று அறிமுகப் படுத்தினான். இஞ்ச பாருங்க விக்னேஸ் என்று இடைமறித்து நான் பேசினேன்.....

என்னை விரும்பும் உரிமை உங்களுக்கு இருக்கிறது அதேபோல உங்களை நிராகரிக்கும் உரிமையும் எனக்கு இருக்கிறது.

உங்கட குடும்பப் பின்னணி வேறு
எங்கட வாழ்க்கைப் பின்னணி வேறு

இருவருக்கும் திருமணம் செய்து கொள்ளும் தகுதிகள் இருந்தும் எம்மால் இணைந்து வாழமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு என்னைப் பிடித்திருக்கிறது என்றால் நாம் நண்பர்களாக இருப்போம் என்றேன் பிறகு விக்னேஸ் வேறு வழியில் சென்றுவிட்டான்.

வசந்தி நீர் செருப்பால அடிப்பன் என்றபோது ஆக்ரோசமிருந்தது ஆனால் முடிவு தெளிவற்றுள்ளது. எனக்கோ ஆணித்தனமாக விக்னேசிற்கு கூறியதில் ஆனந்தம் இருந்தது.... நானும் ஒரு வகையில் ஓடிப்போனவள்தான் யாழ்ப்பாணத்தில் இருந்து கனடாவிற்கு போனதைச் சொல்லுறன்...

கவிதா, வித்தியா, வசந்தி மூவரும் தொடர்பு எண்களை பரிமாறிக் கொண்டார்கள். வித்தியா தொடர்ந்தாள்; எனக்கு காதலில் நம்பிக்கையில்லை. திருமணத்துக்கு முன் காதலிப்பது எனக்கு சரிவராது திருமணத்துக்குப் பிறகுதான் கணவனைக் காதலிப்பது என்ற முடிவில் இருக்கிறன்.

ஊரில பெற்றோர்கள் பார்த்த பையனை எனக்கும் பிடித்துவிட்டது. ஆறு மாதத்தில் கலியாணம் நடக்கும் பாங்கில வேலைக்கு இன்ரவியூ அதுதான் கொழும்புக்குப் போறன்.

வசந்தி போன்ற இளம் பெண்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் ஏமாறுகிறோம் என்பது தெரிந்தும் ஏமாற்றப்படுகின்றார்கள் காரணம் மென்மையான சுபாவம் குறை வடைவதால் வன்மையைக் கையாழுவதுதான் அவர்களை பலவீனத்துக்குள் தள்ளுகின்றது. ஆனால் கவிதா உம்மைப் போன்ற பெண்கள் மென்மையாக விடயத்தை அணுகியதால் அதாவது "நேர்" என்றாலும் அதை நோகாமல் சொல்லியதால் வலிகள் வாழ்க்கையில் வராதிருக்க முடிந்திருக்கின்றது. வசந்தி சொல்லுறன் எண்டு குறை நினைக்காதையும் போனுடன் அதிகம் "கனைக்ற்" ஆகாதையும். ஏனெண்டா மனிதன் அல்லாத உயிரற்ற பொருட்களுடன் இணைப்பில் இருப்பவர்கள் மனச்சோர்வுக்கு உள்ளாவார்கள் என்பது ஆய்வுகள் சொல்லியவை குறிப்பாக அம்மா அப்பாவோட நாங்கள் எப்பவும் இணைப்பிலிருக்க பழகவேண்டும்.

"ஓமக்கா" நான் வவுனியாவிற்கு போறதே பல்கலைக்கழக கல்வியைத் தொடரத்தான். என்போன்றவர்கள் ஏமாறாமலிருக்க படிப்பு முடிந்ததும் விழிப்புணர் வுகள் செய்வேன்....

மூவரும் "செல்பி" எடுத்துக் கொண்டார்கள்.

வவுனியா... கொழும்பு... கனடா... பயணங்களில் வவுனியாவில் இறங்கிக் கொள்கிறாள் வசந்தி. வெடித்துப் பறக்கும் பருத்திப் பஞ்சு ஆடையாக ஆனது போல வசந்தி போகும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறாள் வித்தியா... கவிதா தனது விமான ரிக்கட்டை சரிபார்த்துக் கொண்டிருந்தாள்.

**ஜோ. ஜெஸ்ரின்**
**– யாழ் களரி –**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# British
## College Of Beauty Studies

### OUR FOUNDATION COURSES

01. Diploma in Beauty Culture.
02. Diploma in Advance Makeup
03. Diploma in Advance
    Beauty Theraphy
04. Diploma in Advance
    Dressing Hindu Bridal

### OTHER FOUNDATION COURSES

01. Diploma in English
02. Diploma in Sinhala
03. Business Management
04. Diploma in Leadership
    Training skills development

இதோ நீங்களும் பெண்களே
பட்டதாரியாகலாம்.

**B.A In Beauty Culture**

அரச பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதியுடன்
எங்களுடன் இணையுங்கள். நீங்களும் பட்டதாரியாகுங்கள்.

Study Loan Facilities Available

076 7011 645 / 021 320 4150
No-375 B, Kasthuriyar Road, Jaffna.



# British
## College Of Beauty Studies

இலங்கையில் முதற் தடவையாக பெண்களுக்கான
அழகுக்கலை கல்லூரி


BCBS CAMPUS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mathus & Baras Export and Import Firm

# SIVAM FIRE WOOD DEPOT

336, Kasthuriyar Road, Jaffna






# சிவம் விறகு காலை

**336, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**





**T.P: 077 934 3575**

**E-Mail : mathu.barasa@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜீவா வைத்தியசாலை

(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

**தற்போதைய முகவரி**
1091, காங்கேசன்துறை வீதி,
(நாச்சிமார் கோவில் அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
077 559 4147, 021 568 5333

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக்குரிய ஓலைச் சுவடிகளில் உள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள் – செகராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்திய முறைகள், யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை, அதி சிறந்த (இந்திய, இலங்கை) ஆயுள்வேத நூல்களில் உள்ளவை மூலமாகவும் இலங்கை இந்திய சித்த ஆயுள்வேத மருந்துக்களில் ஆய்வு செய்யப்பட்டு சிறந்ததென தெரிந்தெடுக்கப்பட்ட பக்கவிளைவற்ற (ISO>GMP சான்றிதழ் பெற்ற நிறுவன தயாரிப்புக்கள்) இயற்கை மருந்துகள் மாற்ற முடியாதென கருதி கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பெயர் பெற்றதுடன் விசேஷடமாக குழந்தை இன்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபலம் அடைந்துள்ளது.

இலங்கையில் மாபெரும் வெற்றி கண்ட குழந்தை இன்மைக்கான சுதேச வைத்தியசாலை

- பக்கவிளைவு அற்ற இயற்கை வைத்தியத்தை விரும்புபவர்களுக்கும், வேறு மனிதர்களின் விந்து, முட்டை, வாடகைத்தாய், சத்திர சிகிச்சை என்பவற்றை விரும்பாதவர்களுக்காகவும்
- சத்திர சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் முதலிய சோதனைகளின் வேதனை, மனச் சோர்வு, என்பவற்றை அனுபவிக்க விரும்பாதவர்களுக்காகவும்
- இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்த முடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காகவும்
- ஆண், பெண் இருபாலருக்குமான குறைகள் நீக்கப்படும்

## சிகிச்சைகள்

- வாதம்
- வயிற்றுப்புண்
- சருமநோய்
- உடல் பருமன்
- நரம்பு வியாதிகள்
- முட்டு
- மூலம்
- சொரியா
- மெலிவு
- குழந்தை உருவாக்கம்
- மாறாச்சளி
- சிறுநீர்ப்பை கற்கள்
- சிஸ்ட் உட்பட
- தலைமுடி உதிர்வு

**Dr.ஜெ.ஜெயலன் (DAM)**
(7வது பரம்பரை) அரச பதிவிலக்கம் 13461

**Dr.க.இராஜரட்ணம்**
(25வது பரம்பரை) அரச பதிவிலக்கம் 6067

**Dr.ஜெ.ஜெயலன் (DAM)**
(25வது பரம்பரை)
முன்னாள் விரிவுரையாளர்,
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
அரச பதிவிலக்கம் 12128

சேவை நேரம்
காலை8.00–மதியம்12.00
மாலை3.00–மாலை05.00
(எல்லோரும் நல்லுறவுடனும் அன்புடனும் சமத்துவத்துடனும் வாழ்வோம்
மக்கள் சேவை மகேசன் சேவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

2018 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கு பல இன்னல்கள் மத்தியிலும் எமக்கு உதவியளித்த உறுதுணையாக நின்று எம்மோடு இணைந்து பாடுபட்ட பல உள்ளங்களுக்கும் எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கு அன்பளிப்புக்களை வழங்கி ஒத்துழைப்பு மறைமுகமாக வெளிபடுத்திய வர்த்தக நிறுவனங்களுக்கும், பல்வேறு உள்ளங்களுக்கும்

கடமையுணர்வுடன்

நன்றியை

தெரிவித்துக் கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org